பக்கங்கள்-16 | 17,ஜனவரி.2021 | விலை-30.00






# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -329

## பிரபாகரன் போராடி மரணித்திருப்பாரே தவிர, கோட்டாவின் நாய் கதைக்கு வாய்ப்பேயில்லை - மாவை

## பிள்ளையானின் தமிழ் இன விரோத கருத்துக்கள் வடகிழக்கில் மீண்டும் ஆபத்து

## கொரோனா கொத்தனியும், மக்களின் அவல நிலையும்



-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# கொரோனா கொத்தணியும், மக்களின் அவல நிலையும்



உலகளாவிய ரீதியிலும் கொரோனாவினுடைய தாக்கம் என்பதுகிட்டத்தட்ட 172நாடுகளுக்கு மேல் பரவியுள்ளது. இதனால் இந்த நாடுகளினுடைய பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி கண்டிருப்பதோடு அதனை சரிசெய்யும் வகையில் சீன நாடு மட்டும் இந்த சூழ்நிலையிலும் தனது பொருளாதாரத்தை வலுப்படுத்தியுள்ளது. ஏனைய நாடுகளைப் பார்க்கின்றபோது சீனாவிடமிருந்து மாஸ்க், கொரோனாவிற்கான மருத்துவப் பொருட்களை உபகரணங்களை கொள்வனவு செய்கிறார்கள். இவை அனைத்தும் முற்கூட்டியே சீன நிறுவனங்களில் தயாரிப் படுத்தப்பட்ட பொருட்களே.

இன்றைய கால சூழ்நிலையில் இலங்கையைப் பொறுத்தவரையில் இலங்கையினது அனைத்துப் பிரதேசங்ளிலும் ஆங்காங்கே கொரோனா வைரசினுடைய தொற்று பரவிவரும் நிலையில் மக்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கொரோனா என தனிமைப் படுத்தப்படும் போது அப்பிரதேசங்ளில் இருக்கும் அத்தியாவசியப் பொருட்களை வாங்கும் கடைகள் பூட்டப் பட்டிருக்கும். எனவே பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை மக்களுக்குத் தோன்றும். கொரோனா கொத்தனி என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களை யார் பராமரிக்கின்றார்கள் என்பதை முதலாவதாக தெளிவுபடுத்த வேண்டும். அரசாங்கம் நேரடியாக செய்கின்றதா?, மாவட்ட அல்லது பிரதேச செயலகம் மூலமாகவா? சுகாதார பிரிவி-னரின் மூலமாகவா?, பொலிஸ் திணைக்களமா?, இராணுவப் பிரிவினரால் கையாளப்படுகிறதா?, பொது நிறுவனங்கள் இதனைக் கையாள்கிறதா? இவ்வாறு இச் செயற்பாடுகளில் தெளிவில்லாததன் காரணமாக ஒரு அத்தியாவசியத் தேவையின் நிமித்தம் ஒருவர் யாரை நாடவேண்டும் என்கிற துரதிஷ்டவசமான சூழல். குறிப்பாக இப்பிரதேங்களில் வசிக்கும் கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள், வயதானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் என இவர்களை யார் கவனிப்பது. ஒழுங்காக மாத்திரைகளை மூன்று வேளையும் பருகவேண்டும் எனப் பலர் இருக்கிறார்கள். பொலிசார், இராணுவத்தை குறித்த பிரதேசங்களில் குவித்து பரபரப்பை ஏற்படுத்துகின்றார்களே தவிர, அத்தியாவசியத் தேவைகளுக்காக கடைகளுக்குச் சென்றால் குறித்த கடைகள் பூட்டப்பட்டுள்ளன. இதைவிட சிறுவர் காப்பகங்களில் வசிக்கும் சிறார்கள் உணவுக்கு அல்லல்படும் நிலையும் தோன்றியுள்ளது. இவ்வாறு இருக்கின்றபோது எவ்வாறு இவர்கள் தமது அன்றாட வாழ்க்கையினைக் கவனித்துக்கொள்வது.

கொரோனா கொத்தனி என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் சமூக இடைவெளி பேணப்படுகிறதா எனக் கண்காணிக்க எவரும் இல்லை. குறிப்பாக குறித்த கொத்தனிகளில் நாளாந்தம் இருபது, முப்பது நபர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற அறிக்கை மாத்திரம் வருகின்றது. பாதுகாப்பாக குறித்த பிரதேசங்களில் மரக்கறி, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் காலை உணவு போன்றவற்றை உரிய சுகாதார வழிமுறைகளைப் பற்றி விநியோகிக்க வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும். இப்பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு குடிநீர்ப் பிரச்சினை எழுந்துள்ளது.

குறிப்பாக கடைகளில் சில பொருட்கள் இரண்டொரு நாட்களில் பழுதாகக்கூடிய நிலையில் இருக்கிறது. அவற்றை உடனடியாக விற்கவேண்டிய சூழல் இருக்கிறது. ஆனால் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட பிரதேங்ளில் இருக்கும் பூட்டப்பட்ட கடைகளில் இப் பொருட்கள் தேங்கிக் கிடக்கிறது. மரக்கறி மற்றும் பழக்கடை வியாபாரிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை பிற மாவட்ட மக்கள் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட இங்கே வரக்கூடாது என்றுகூறுகின்றார்கள். வரக்கூடாது தான் ஆனாலும் அவர்களை இருந்தாலும் அவர்களை வேற்றுக்கிரகவாசிகள் போல பார்க்கின்றார்கள். இவர்களுக்கான அன்றாட உணவுகளை எவரும் கொடுப்பதில்லை. அரிசி, மா, சீனி, தேயிலை போன்றவற்றைக் கூட இவர்கள் வாங்குவதற்கான வசதி நிலைகளும் இல்லை. இவ்வாறான நிலைமைகளை இந்த அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க தவறியதன் விளைவே, மக்கள் கள்ளத்தனமாக இப்பகுதிகளில் இருந்து வெளியேறக் காரணமாக அமைகிறது.

குறித்த தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் சுகாதாரப் பிரவினர் காலை அல்லது பிற்பகல் வலம் வருவதுடன் அவர்களின் நலன்களை விசாரிக்கின்ற செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக கொரோனா வைரசின் தாக்கம் ஒரு பக்கம் இருந்தாலும், மக்கள் ஒரு நேர உணவையாவது உட்கொண்டு கொரோனா வைரசினை கட்டுப்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள். சமையல் வேலை செய்பவர்கள், நாட்கூலிக்காக, மாதக் கூலிக்காக கடைகளில் வேலைபுரிந்தவர்களின் நிலை பரிதாபம்.

வவுனியாவில் பட்டானிச்சூர் என்ற பிரதேசத்தை மையமாக வைத்தே இக் கொரோனா தொற்றாளர்கள் பெருமளவில் இனங்காணப்பட்டு வருகின்றனர். இப்பிரதேசங்களில் வசித்தவர்கள் மறைமுகமாக வியாபார கடைகளுக்கு சென்று தமது வியாபாரங்களை நடத்தியதும், வேலை பார்த்ததாலும் இவ் வைரஸ் வவுனியா நகரப் பகுதியை தாக்கியுள்ளது. குறித்த பகுதிகளில் இருக்கக்கூடிய தனியார் மருத்துவமனைகளுக்கு சென்றதன் ஊடாக வைத்தியர்களும் இதில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மோசமான அளவில் குறித்த பிரதேசம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பிரதேச மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்காமையின் காரணமாக, அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக கையில் பணம் இல்லாததன் காரணமாக, அவர்கள் மறைமுகமாக தொழிலுக்குச் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. மாவட்ட ரீதியான போக்குவரத்தினை தடை செய்ய வேண்டும். குறைந்தது இரு மாத காலங்களுக்காவது இவ் தடை விதிக்கப்படவேண்டும். முடக்கப்பட்ட தனிமைப் படுத்தப்பட்ட கொரோனா என அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு அரசு உணவு விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும்.

முதலாவதுகொரோனா அலையின் போது தேர்தல் காலம். அப்போது அதிகமான அரசியல்வாதிகள், அறிமுக வேட்பாளர்கள் இப்பிரதேசங்களுக்கு ஓடி ஓடி சென்று மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினார்கள். எனினும் தற்போதைய இரண்டாம் அலையின் போது இந்தப் பகுதிகளுக்கு குறித்த நபர்கள் செல்லவில்லை. அப்படியாகவிருந்தால் இவர்கள் தமது சுயநல அரசியலையே இவ்வளவு காலமும் செய்து வந்துள்ளார்கள் என்பது புலப்படுகிறது.

தற்போது மாகாண சபை தேர்தல் என்று ஒரு அறிவித்தல் கிடைத்துவிட்டால் அனைத்து மக்களது கைகளுக்கும், கொரோனா கொத்தனியில் இருப்பவர்களுக்கும் நிவாரணங்கள் சென்றடையும் என்றால் அது ஆச்சரியமில்லை. இன்று குறித்த அரசியல்வாதிகள் எல்லோரும் எங்கேபோனார்கள். கட்சிகளுடைய செயலாளர்கள், அமைப்பாளர்கள் எங்கே போனார்கள். தங்களது சுயலாப அரசியலுக்காக தமிழினத்தை அடகுவைக்கின்ற நடவடிக்கையையே இவர்கள் செய்து வருகின்றார்கள். சுயநல அரசியல் போக்கை இவர்கள் கைவிடவேண்டும். மாறி மாறி வந்த அரசுகள் தமது சுயநல அரசியலையே செய்துவருகிறார்கள். கொரோனா வைரசினுடைய தன்மையை விளங்கிக் கொள்ளாதவர்களாக இன்னமும் இனவாதத்தை விதைக் கின்றார்கள். கொரோனா வைரசினை வைத்து முஸ்லீம்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என்ற கருத்தும் கூறப்படுகின்றது. முஸ்லீம்கள் இன்று பழி வாங்கப்படவில்லை. விடுதலைப் போராட்டம் மௌனிக்கப் பட்டதிலிருந்து பழிவாங்கப் படுகிறார்கள்.

இனியொரு மாகாண சபைதேர்தல் இடம்பெறுமா என்பது கேள்விக்குறி. எது எவ்வாறாகவிருப்பினும் இந்த கொரோனாவினது தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரப் பிரிவினர் கடுமையான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக இராணுவம், பொலிஸ், அரச உயர் அதிகாரிகள் போன்றவர்களும் இதில் உள்ளடக்கப்படுகிறார்கள். ஆனாலும் முடக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் இவர்களது செயற்பாடுகள் எப்படி என்று பார்க்கின்றபோது கண்ணுக்கு தெரியக்கூடிய இடங்ளுக்கு மட்டும் இவர்கள் சென்று வருவதனால் ஏனைய பகுதியில் வாழும் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

இலங்கையைப்பொறுத்தவரையில் ஆரம்பகட்டத்தில் நூறு பேர் பாதிக்கப்பட்டார்கள் இவ் வைரசினால். இன்று இத் தொற்று நாற்பதாயிரத்திற்கு மேல் அதிகரித்துள்ளது என்பதும் 200இற்கு மேல் மரண மடைந்திருக்கின்றார்கள். இவற்றைவைத்துப் பார்க்கும்போது அரசாங்கம் சரியாக செயற்படவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. ஆகவே கொரோனா கொத்தனிகளை இனங்காட்டுகின்ற அரச ஊழியர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அப்பிரதேசத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கான உடனடி நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே மக்களின் வேண்டுகோளாகவும், எமது ஊடகத்தின் வேண்டுகோளாகவும் இருக்கிறது.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தமிழ் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும்

இன்றைய காலச் சூழ்நிலையில் ஊடகங்களினதும். ஊடகவியலாளர்களினதும் பங்களிப்பானது இன்றியமையாததொன்று. ஆனாலும் தமிழ் அரசியல் ரீதியிலான விடயங்களோடு அபிவிருத்தியையும் ஒன்றிணைத்து அரசாங்கத்தை தூய்மைப்படுத்தி அரச ஒட்டுக்குழுக்களை தூய்மைப்படுத்தி பெரிதாக காட்டுகின்ற தமிழ் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் தமிழினத்திற்கு செய்வது துரோகம் என்றே கூறலாம்.

சிங்கள ஊடகவியலாளர்கள் தமது இனம் சார்ந்த விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதோடு அவர்கள் எழுதுகின்ற விடயங்களில் நாம் குறை கூறக்கூடாது. எமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக அது யாராக இருந்தாலும் அதனை மறுப்பதோடு அதனை மக்கள் மத்தியில் பகிரங்கமாக கொண்டுவர வேண்டும். கொரோனா காலத்தில் 5 ஆயிரம் ரூபாயை அரசாங்கம் வழங்குகின்றது. நிவாரணங்களை வழங்குகின்றது என்ற காரணத்தை வைத்து அரச பிரதிநிதிகளாக செயற்படுகின்ற தமிழ் அரசியல்வாதிகள் ஏதோ நமக்கு நன்மை செய்துவிட்டார்கள் என்பதற்காக அவர்களுக்காக வாக்களிக்க சொல்வதும் அல்லது தொடர்ந்தும் அவர்களை ஆதரித்து போவது என்பது தொடர்பிலும் தமிழ் ஊடகங்கள் வலியுறுத்தி வருகின்றது என்பது கவலைக்குரியது.

கடந்த காலங்களில் இவர்கள் கொலை. கொள்ளை. கற்பழிப்புடன் தொடர்புடையவர்களாகவே இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டார்கள். பிரபாகரன் - கருணா பிளவு என்பது இதனை இலாபகமாக பயன்படுத்திய இலங்கை அரசு மற்றுமொரு தந்திரோபாயமாக பிள்ளையான் - கருணா பிளவை ஏற்படுத்தியது. ஆனா லும் இவர்கள் ஒரே இயக்கத்தை சேர்ந்தவர்கள். பிரபாகரன் எம்மை கொலை செய்கின்ற வரையிலும் நாம் போராடினோம். யாழ்ப்பாணத்தான் வடக்கான் கிழக்கான் என்று அண்மையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசன்துறை சந்திரகாந்தன் ஊடகங்களுக்கு முன் கூறியிருக்கின்ற விடயங்கள் அனைத்தும் மீண்டும் வடக்கிழக்கு தமிழ் பிரிவினையை தூண்டி விடுகின்ற ஒரு செயற்பாடாகவே அமையப்பெருகின்றது. கருணா பிள்ளையான் பிரிவு என்று அரைவாசிக்கு மேல் தமிழீழ விடுதலைப்புலிகள் கொலை செய்யப்பட்டார்கள். இன்று வீண் பழியை தேசியத் தலைவர் பிரபாகரன் மீது பிள்ளையான் சுமத்துகின்றார்.

சிங்களவர்கள் ஒருபோதும் தமிழினத்திற்கு வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை கையில் தாரைவார்த்து கொடுக்கப் போவதில்லை. போராட்டம் இந்த நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது அனைவருமே பயங்கரவாதிகள். கொழும்பிற்கு சென்று வருவதாக இருந்தால் எத்தனை சோதனைச்சாவடிகள் என்பது பற்றி தமிழினம் அறிந்திருக்கிறது.

ஆகவே தமிழ் ஊடகவியலாளர்கள் குறித்த பிள்ளையானின் ஊடக சந்திப்பில் வரலாறு அறிந்த கேள்விகளை கேட்கவில்லை என்பது சக ஊடகவியலாளர் மத்தியில் மன கசப்பை தோற்றுவித்துள்ளது. வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் உருவாக்கப்பட்டால் மட்டுமே தமிழர் இந்த நாட்டில் நிம்மதியாக வாழ முடியும் என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்




இலக்கு அழிக்கப்பட்டபின், சகலரும் வேகமாகப் பின்வாங்குவார்கள். தாக்கு தலைத்தொடுக்கும் போது, தீர்க்கமாகவும் செயலூக் கத்துடனும் வேகமாகவும் செயற்பாடு முன்வைக்கப்பட்ட பணியைப் பூரணமாக நிறைவேற்று. கெரில்லாக்களின் தாக்குதலுக்கு உள்ளாகும் சாத்தியமுள்ள இலக்கின் மீது, அருகிலுள்ள நிலைகளிலிருந்து சுடுவதற்கான தரவுகளை வழக்கமாக எதிரி முன்னரேயே தயார்ப் படுத்தியிருப்பான் என்பதை நினைவில்கொள். ஆகவே தான் அதிகூடிய தேவையின்றி ஓர் இடத்தில் கணிசமானளவு கெரில்லாக் குழுக்களைக் குவிக்கும் தவறைவிடக்கூடாது.

இதனால் உடனேயே ஆட்டிலறி, மோட்டார் அல்லது இயந்திரச் சுடுகலன் சூட்டிற்குள் அகப்படவேண்டி ஏற்படலாம். நடவடிக்கையின் பின் கெரில்லாக்கள் பின்வாங்கு வதற்குக் காப்பளிக்கின்ற சேமப்படை, பின்தொடர முயற்சிக்கின்ற எதிரியைச் சுட்டுத் தடுத்து நிறுத்துவதற்காகப் போதுமானளவு இயந்திரச் சுடுகலன்களைக் கொண்டிருக்க வேண்டும். பின்வாங்கல் பாதைகளில் விதைப்ப தற்காகக் கண்ணிகளைக் கொண்டிருப்பதும் நல்லது. இது பாசிஸ்டுக்களின் பின்தொடரல் வேகத்தைக் குறைப்பதுடன் பிரதான கெரில்லாப்படை கூடிய தூரத்திற்குச் செல்லும் சாத்தியத்தையும் தந்து தமது இருப்பிடத்திற்குச் செல்லவும் உதவுகின்றது. சுற்றுவழிகளால் பின்வாங்க முயற்சிசெய். பதுங்கித் தாக்குதல் புகைவண்டிப் பாதையில் எதிரிப் புகைவண்டிகள் மீது தடம்புரட்டல்களை மேற்கொள், பாசிஸ்டுக்களின் சகல ஆட்பலத்தையும் பொருட்களையும் அழி, போக்குவரத்து ஊடகங்களைத் தீக்கிரையாக்கு. பள்ளத்தாக்கான பகுதியில் புகைவண்டி சாய்வாக நகருகின்றபோது, தடம்புரட்டலை மேற்கொள்வது மிகவும் பொருத்தமானதாகும். பாதையிலிருந்து விலகிய புகைவண்டி இயந்திரம் செங் குத்தான பள்ளத்தில் வேகமாக விழுகின்றது. புகைவண்டிப் பெட்டிகளோ பெரிய நெரிசலை ஏற்படுத்திவாறு ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்து விடுகின்றன.

புகைவண்டி இயந்திரம் அழிந்துவிடுவதுடன் எதிரி துப்புரவாக்கும்வரை இப்பாதையால் புகை வண்டிகளின் நகர்வும் தடைப்படுத்தப்படுகின்றது. எரிபொருள் கொள்கலன்களைக் கொண்ட புகை வண்டிகளைத் தகர்ப்பதால் வழக்கமாகத் தீப்பற்றலும்ஏற்படுகின்றது. ஆழமான பள்ளத் தாக்குகளில் கெரில்லாக்கள் சூட்டுத்தாக்குதலைமேற்கொள்வதும் சிறந்ததாகும். பாசிஸ்டுக்களால் வேகமாகப் பக்கங்களுக்கு ஓடித்தப்பித்துக்கொள்ள முடியாது. பள்ளத்தாக்கின் மேல்சாய்வு விளிம்புப் பகுதியிலிருந்தவாறு பாசிஸ்டுக்களை இலகுவாக சுரிசுடுகலன்களதும் இயந்திரச் சுடுகலன்களதும் சூடுகளால் அழிக்கலாம். அத்துடன், அங்கிருந்து புகைவண்டி நெடுகிலும் சுடவும் வசதியாக இருக்கும். கூடுதலான புகைவண்டிப் பெட்டிகளைத் தடம்புரட்டுவதற்காக, உயர் மண்மேடுகளிலும் வளைவான பகுதிகளிலும் பதுங்கித் தாக்குதலுக்கான பொறிகளை உருவாக்கலாம். பாசிசப் படைகளைக் கொண்டிருக்கின்றதும் கவசப் புகை வண்டிப் பாதையைச் சோதனையிடும் இரும்புப்பாதைக் கவசத் தள்ளுவண்டி போன்றவற்றைக் கொண்டிருக்கின்றதுமான முகாம்கள் அமைந்துள்ள புகைவண்டி நிலையங்களிலிருந்தும் சந்துகளிலிருந்தும் தொலைவில் தாக்குதலுக்கான இடத்தைத் தெரிவு செய். வேகமா கப் பாசிஸ்டுக்கள் உதவி கோருவதைத் தடுப்பதற்காக தடம்புரட்டலுக்கு முன்னர் அருகிலுள்ள நிலையங்களுடனான தொடர்புகளைத் துண்டிக்க மறக்காதே. போதிய நேரமும் படைகளும் இருக்குமானால் புகைவண்டி தாக்குதலுக்குள்ளாகவுள்ள இடத்திலிருந்து இரண்டுபக்கமும்சில நூறு மீற்றர்கள் தொலைவில் கெரில்லாச் சேமக் குழுக்களை நிறுத்திவைத்திருக்க வேண்டும். பதுங்கித் தாக்குதலை மேற்கொள்கின்ற பிரதான படைகளின் நடவடிக்கைகளைச் சீரழிக்க வருகின்ற எதிரியினது உதவிப்படைகளின் முனைப்புக்களைத் தாக்கித் தடைப்படுத்தத் தயாராகக் கெரில்லாச் சேமக்குழுக்கள் இருக்க வேண்டும். பதுங்கித் தாக்குதலுக்கான நடவடிக்கையில் இறங்க முன்னர் அவதானமாக வேலை மேற்கொள்.

தாக்குதலுக்கு மிகவும் பொருத்தமான இடத்தையும் அதனைச் சென்றடைவதற்கான பாதை களையும் தெரிவுசெய். தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்துண்டின் பாதைகளிலுள்ள நகர்வுகளையும் தற்காப்பு நடவடிக்கைகளையும் ஆய்வறி. எந்த நேரத்தில் அதுவும் குறிப்பாக என்ன பொருட்கள் புகைவண்டிகளால் கொண்டு செல்லப்படுகின்றன எப்பொழுது பாதைச் சோதனையாளர்களும் ரோந்துக்காரர்களும் வருகின்றார்கள். இரவில் பாதையில் ஒளிபாய்ச்சிகளையும் வெளிச்சக் குண்டுகளையும் அவர்கள் பயன் படுத்துகின்றார்களா கவசத் தள்ளுவண்டி புகைவண்டிக்கு வழிகாட்டியாகச் செல்கின்றதா போன்றனவாகும். தாக்குதல் நடக்கின்ற இடத்திற்கு உதவிக்காக வரக்கூடிய அருகிலுள்ள பாசிஸ்டுக்களின் முகாம்கள் எங்கே அமைந்துள்ளன என்பதனையும் அறிந்துகொள். நடவடிக்கையில் தனது பணியென்ன என்பதனை ஒவ்வொரு கெரில்லாவும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். எதிரிக் காவலாளியை மடக்குதல் தண்டவாளத்தைப் பிடுங்குதல் அல்லது தகர்த்தல் தனது சூட்டுக்களால் பிற தோழர்களைக் காத்தல் போன்ற பலவாகும். ஆளணிகளைக்கொண்டுசெல்கின்ற தொடரணி யைத் தாக்கும் போது கெரில்லாக்கள் வேகமாக எதிரியைச் சுற்றிவளைக்கக்கூடிய வகையில் பதுங்கி நிலையெடுத்துக் கொள்கின்றார்கள்.

கெரில்லாக்களின் பிரதான படைப்பலம் தொடரணியின் நடுப்பகுதிக்குக் கிட்டவாகவும் அதன் பின்பகுதியிலும் இருக்க வேண்டும். ஏனெனில் முன்பகுதிப் பெட்டிகள் தடம்புரளலின் போது கூடியளவில் அழிந்துபோகின்றன. ஒரு பகுதி கெரில்லாக்கள் தொடரணியின் பின்பகுதிக்கெதிராக இரு மருங்கிலும் தன்னியக்கச் சுடுகலன்களுடனும் இயந்திரச் சுடுகலன்களுடனும் இருப்பார்கள். இது புகைவண்டிப் பெட்டிகளின் நெடுங்கிலும் சூட்டை மேற்கொள்வதற்கும் அவற்றிலிருந்து வெளியேறுகின்ற பாசிஸ்டுக்களைக் கொல்வதற்கும் இலகுவாகும். புகைவண்டி நெடுகிலும் கெரில்லாக்கள் மேற்கொள்கின்ற சூடுகள் குழுக் கட்டளையாளனின் கட்டளைப்படி அல்லது சைகையின் படி தொடங்கப்படவும் நிறுத்தப்படவும் வேண்டும். தவறுமிடத்து எதிரித் தொடரணியைத் தாக்குகின்ற உங்களது தோழர்களைச் சுட்டும் விடுவீர்கள். பதுங்கித் தாக்குதலுக்காக நிலையெடுக்கும் போது உருமறைப்பிற்கான சகல வேண்டுதல்களையும் கடைப்பிடி. கெரில்லாக்கள் தொடரணி மீது தாக்குவதற்கான சைகையாகத் தண்டவாளத் தகர்ப்பும் புகைவண்டி இயந்திரத் தடம்புரட்டலுமே விளங்கும். சுடுகலனாலும் இயந்திரச் சுடுகலனாலும் தன்னியக்கச் சுடுகலனாலும் புகைவண்டிப் பெட்டிகள் மீது செறிவான சூட்டை மேற்கொள் அவற்றின் மீது கையெறிகுண்டுகளை வீசு பாசிஸ்டுக்கள் மத்தியில் பயப்பீதியை உண்டாக்கு. நிதான நிலைக்கு அவர்களை வரவிடாமல் வீரமானதும் தீர்க்கமானதுமான செயற்பாடுகளால் அழி. சூழ்நிலை அடந்தருமானால் எதிரியின் பொருட்களிடையே உனது சேமிப்பை நிரப்பக்கூடிய அவசியமான பொருட்களைத் (ஆயுதங்கள், வெடிபொருட்கள், உணவுப்பொருட்கள், ஆடைகள், மருந்துப் பொருட்கள்) தேட முயற்சி செய். இதன் பின்னர் மாத்திரமே உன்னால் எடுத்துச்செல்ல முடியாத சகல பொருட்களையும் அழி.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**

# பிரபாகரன் போராடி மரணித்திருப்பாரே தவிர, கோட்டாவின் நாய் கதைக்கு வாய்ப்பேயில்லை - மாவை சேனாதிராஜா





ஜனாதிபதி பாராளுமன்றத்தையும் தமிழ்த் தேசிய இனத்தையும் அச்சுறுத்தியுள்ளார். இது ஒரு கொலை அச்சுறுத்தலே தான் என தெரிவித்துள்ள தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா. ஜனாதிபதியின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமெனவும் கோரியுள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில். அம்பாறை மாவட்டம் உஹனையில் 09.01.2021 அன்று நிகழ்வொன்றில் உரையாற்றும் போது பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோவுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தது மட்டுமல்ல தமிழ்த் தேசிய இனத்தின் போராட்டத்தையும் எதிர்த்து அச்சுறுத்தி. **'பிரபாகரனையும் புலிகளையும் நாயைச் சுட்டுத் தள்ளியதுபோல் மீண்டும் செயல்பட முடியும்'** எனப் போர் முழக்கம் செய்துள்ளார். பத்திரிகைகளில் இச்செய்திகள் வெளிவந்தபோது நாம் மட்டுமல்ல உலகமே மீண்டுமொருமுறை அதிர்ச்சியடைந்துள்ளது.

இலங்கையில் 2009 வரையில் போரின் காலத்தில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றமை மட்டுமல்ல அதற்கு யார் பொறுப்பாக இருந்தார் என்பதும் இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது. சர்வதேசத்திற்கு முன்னால் இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாட்டையும் நிறுவியுள்ளது. அதற்கு அப்பால் ஜனாதிபதியின் பொது வெளியுரை அநாகரிகமானது மட்டுமல்ல இலங்கை நாட்டையே நாகரிகமற்ற நாடாக்கியுள்ளது என்றே கூற வேண்டும். பாராளுமன்ற ஜனநாயகத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மட்டுமல்ல நாட்டு மக்களின் ஜனநாயகத்திற்கும் இராணுவ மயமான ஒரு ஆட்சியின் கீழ் அடக்கி ஒடுக்கப்படும், இனப்படுகொலைக்குள்ளாகி வரும் தமிழ் தேச மக்களுக்கும் அவர்களின் ஜனநாயக உரிமைப் போராட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள போர் அபாயத்தையும். இனப் படுகொலை அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஜனாதிபதி 'நந்திக்கடல் பிரதேசத்தில் நாய்களைப் போல விடுதலைப் புலிகளைச் சுட்டுக் கொன்றேன்' என்றால் போர்முனையில் இருந்திருக்கிறேன் என்பது தானே. பிரபாகரனையும் இழுத்துச் சென்று சுட்டேன் என்றால் உயிருடன் நந்திக் கடல் போர்முனையில் பிடிக்கப்பட்டிருந்தால் நீதிமன்றிலல்லவா நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். அல்லாமல் சுட்டுக் கொன்றேன் என்றால் அது போர்க்குற்றம் தானே. இப்படித்தான் பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இராணுவத்திடம் சரணடைந்தவர்களும் கொல்லப்பட்டுவிட்டார்களா? நாய்களைப் போல் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்களா?

நான் அறிந்தவரையில் பிரபாகரன் களத்தில் போராடியிருப்பாரே தவிர சரணடைந்துவிடாத சுபாவம் கொண்டவர். அவரது மகன் பாலச்சந்திரன் அப் போர்க்களத்தின் நடுவே எவ்வளவு அப்பாவித்தனமாகக் கொல்லப்பட்டான் என்பதை உலகம் அறியும். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூவான் வெலிசாயாவில் பதவி ஏற்பு நிகழ்வில் பதவி ஏற்றார். அச் செய்கையானது நாட்டை ஆண்ட எல்லாள மன்னனைத் துட்டகாமினி போரில் தோற்கடித்தான் என்பதை நினைவூட்டுகிறது. அது போல தான் பிரபாகரனை கொன்று வென்றென் என்று தானே கூறுகிறார்.

ஆனால் போரில் தோல்வியுற்ற எல்லாளன் (கி.மு 145 - 101) மன்னனுக்கு நினைவிடம் (சமாதி) அமைத்து மரியாதை செய்து அனைவரையும் அந்த நினைவிடத்தில் நின்று மரியாதை செய்யக் கட்டளையிட்டவன் துட்டகாமினி. துட்டகாமினி (கி.மு 101 -77) புத்த தர்மத்தைப் பின்பற்றியவன். வரலாறு கூறும். மகாவம்சத்தில் 'சிங்கள' என்ற வார்த்தை இருக்கவில்லை. அவ்வாறில்லாமல் 'நந்திக்கடலில் போரில் பிரபாகரனையும். விடுதலைப் புலிகளையும் இழுத்து வந்து நாய்கள் போல் சுட்டேன்' என்று கூறி பாராளுமன்ற உறுப்பினர்களை. பாராளுமன்ற ஜனநாயகத்தை. தமிழ்த் தேச மக்களை இழிவுபடுத்தி நாட்டின் தலைமைத்துவப் பண்புகளை இழந்து நாகரிகத்தை மண்ணில் புதைக்கலாமா? ஜனாதிபதியின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிச்சயம் சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய குற்ற ஒப்புதல் வாக்கு மூலமே தான்! எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களப் பேரினவராத அரசு ஒரு போதும் தமிழினத்திற்கு விடுதலையைப் பெற்றுத்தரப்போவதில்லை. விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறிய விடயங்களைப் பார்ப்போமாக இருந்தால் இன்று இது உண்மை என புலப்படுகின்றது. கிட்டுவின் உயிர்த் தியாகத்தையொட்டி. 1993ஆம் ஆண்டு ஜனவரி 18 முதல் 20ம் திகதி வரை. மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. கிட்டு கப்பலில் வருவது மாத்தையாவால் தான் இந்திய உளவுப் பிரிவுக்குத் தெரிய வந்தது என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது. எனவே யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்ட அஞ்சலிக் கூட்டத்தில் மாத்தையா கலந்து கொள்ளவில்லை.

இது குறித்து அடேல் பாலசிங்கம் எழுதிய நூலில். 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு நாள். கொக்குவில் பகுதியில் உள்ள தனது வீட்டிற்கு வந்த மகேந்திரராசா உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும். ஓர் அறையை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். பாலசிங்கம் உண்ணாவிரதம் இருப்பதன் அவசியம் என்ன என்று கேட்டபோது. அவர் புலிகள் இயக்கத்தின் உப தலைவர் பதவியிலிருந்தும். அரசியல் கட்சி தலைவர் பொறுப்பிலிருந்தும் தாம் விலக்கப்பட்டது காரணமாக இயக்கத்தின் தலைமைப்பீடத்தின் மீது ஏமாற்றம் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார். அரசியல் கட்சியான விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியில் மாத்தையா மீது. தனக்கென ஒரு குழுவை உருவாக்கி. செயற்படுவதாகவும். தனக்கு விசுவாசமான ஒரு சிலரின் விருப்பத்தை மட்டுமே நிறைவேற்றி வருவதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதனையொட்டி அவர் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இந்திய உளவுத்துறையின் வலையில் சிக்கி. பிரபாகரனை அகற்றும் திட்டத்துக்கு உடன்பட்டு. பெரும் சதித்திட்டம் தீட்டியதாகவும் தெரியவந்தது. அவரும் அவரது சகாக்களும் கைது செய்யப்பட்டனர். இதன் பின்னர் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி கலைக்கப்பட்டு. அதற்குப் பதில் அரசியல் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு. அதில் யாழ். தள பதியாக இருந்து வந்த சு.ப.தமிழ்ச்செல்வன் நியமனம் ஆனார். பிரேமதாசாவால் ஒதுக்கப்பட்டிருந்த அதுலத் முதலியும். காமினி திசாநாயக்கவும் தங்கள் பகையை மறந்து. புதிய கட்சி ஒன்றைத் தொடங்கி மேற்கு மாகாண இடைத் தேர்தலில் தீவிரம் காட்டினார். தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசிக் கொண்டிருந்தபோது. முன்வரிசையில் அமர்ந்திருந்த ஒருவரால் லலித் அதுலத் முதலி (ஏப்ரல் 23.1993) சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கடுத்த பத்து தினத்துக்குள் மே தின ஊர்வலத்தில் கலந்துகொண்ட அதிபர் பிரமேதாசா. ஆமர் வீதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடியை தானே சரிசெய்கிறேன் என்று இறங்கினார். அந்த ஊர்வல நெருக்கடியிலும் கூட்டத்தில் ஊடுருவிய சைக்கிளைத் தடுத்து நிறுத்த காவலர்கள் முயன்றபோது. அந்த சைக்கிள் வெடித்து. பிரேமதாசா உள்ளிட்டோர் இறந்தனர். இந்தக் கொலைக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று புலிகள் அறிக்கை வெளியிட்டனர். ஒருவாரத் துக்கத்திற்குப் பிறகு மே 7இல் பிரதமராக இருந்த விஜேதுங்க. தற்காலிக அதிபராக ஆறு மாதங்கள் பதவி வகித்தார். கணவர் விஜயகுமாரதுங்க கொலையுண்ட பின்னர். லண்டனில் வசித்து வந்த சந்திரிகாவை உடனே நாடு திரும்பும்படி. தாயார் சிறீமாவோ உத்தரவிட்டார். நாடு திரும்பிய சந்திரிக்கா குமாரதுங்க நாட்டில் அமைதியை நிலைநாட்டப் பாடுபடப்போவதாக அறிவித்தார். மக்களும் அதையே விரும்பியதால். வலுவான கூட்டணியும் அமைத்து 19.08.1994ல் பிரதமரானார். பதவி பொறுப்பை ஏற்றதும். தமிழர் பகுதிகளில் பிரேமதாசா விதித்த பொருளாதாரத் தடைகளை சிறிதளவு தளர்த்தினார்.

சந்திரிக்காவின் இந்த நடவடிக்கையை வரவேற்று. விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் செப்டெம்பர் 02.1994 அன்று. கையெழுத்திட்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதன் ஒரு பிரதியை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் சந்திரிக்காவுக்கும் அனுப்பி வைத்தார். அவ்வறிக்கையில் முந்தைய அரசின் பொருளாதாரத் தடையை சிறிதளவு நீக்கிக் கொண்டதற்கு எங்களது வரவேற்பைத் தெரிவித்துக் கொள்வதுடன். அந்தத் தடையை முழுவதுமாக நீக்குவதற்கும் உத்தரவிட வேண்டும். இவ்வகையாக எமது பகுதியில் முற்றிலுமாக அமைதி நிலவ ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு புலிகள் இயக்கம் முழு ஒத்துழைப்புத் தரும். இதன் நல்லெண்ண வெளிப்பாடாக போர்க் கைதி களாக எம்மிடம் உள்ள பத்துப் பொலிஸாரை விடுதலை செய்யவும் தயாராக இருக்கின்றோம். நான்காண்டு பொருளாதாரத் தடையால் அவதியுறும் மக்கள் சிங்களவர்களைப் போன்று அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் பெறுவதற்குண்டான வழிவகைகளைச் செய்வது. எம்மை மகிழ்ச்சி அடையச் செய்யும். மேலும் நிபந்தனைகள் எதுவும் விதிக்காமல் பேச்சுவார்த்தை நடத்த சம்மதித்தால். நாங்கள் போர் நிறுத்தம் செய்யவும் தயாராக இருக்கின்றோம்' என்றும் அதில் உறுதியளித்திருந்தார்.

இந்த அறிக்கை தனக்கு கிடைக்கப் பெற்றதும் மகிழ்ந்த சந்திரிகா குமாரதுங்க. செப்டெம்பர் 9.1994 அன்று வே.பிரபாகரனுக்கு பதில் கடிதம் எழுதியதன் மூலம். விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு கடிதம் எழுதிய முதலாவது பிரதமர் என்ற பெயரையும் பெற்றார். 1994ம் ஆண்டு சந்திரிக்கா. பிரபாகரனுக்கு சமாதானத்தை ஏற்படுத்தித் தருவதாக கடிதம் எழுதினார். ஆனால் அவரும் இன அழிப்பையே செய்தார்.' அந்தக் கடிதத்தில். முந்தைய அரசு ஏற்படுத்திய பொருளாதாரத் தடையை நீக்கியதை வரவேற்று புலிகள் வெளியிட்ட அறிக்கையைக் கண்டு மகிழ்கின்றேன். நல்லெண்ணம் மற்றும் நல்லுறவு மேம்பட வேண்டும் என்ற அவாவில் பொருளாதாரத் தடையின் சில அம்சங்களை விலக்கி இருக்கின்றேன். அதே போன்று பல ஆண்டுகளாக புலிகளின் சிறையில் இருந்த பத்து பொலிசாரை





விடுவிக்கும் முடிவும் வடக்கு கிழக்கு பிரச்சினைகளைத் தீர்க்க உதவும். யாழ்ப்பாணம் மக்களுக்கு அனைத்துப் பொருட்களும் கிடைக்க வேண்டுமானால். அங்கே பொருட்களைக் கொண்டு வந்து இறக்குவதே முக்கிய பிரச்சினையாகும். அதற்கான வழிகளை உடனடியாகக் கண்டறிவோம். மின்சாரம். சாலைகள் மேம்பாடு. விவசாயத்துக்கான நீர்ப்பாசன வசதிகள் போன்றவை கிடைக்க உடனே முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இதற்கு தங்களின் ஒத்துழைப்பும் தேவை. பேச்சுவார்த்தையில் ஈடுபட இருக்கும் பிரதிநிதிகள் பெயரை அறிவித்தால். அதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபடலாம் என்றும் சந்திரிக்கா குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடித்தில் பிரபாகரன் எழுதியிருந்த முற்றிலுமான பொருளதாரத் தடையை நீக்குதல் மற்றும் போர் நிறுத்தம் குறித்து சந்திரிக்கா எதுவும் குறிப்பிடாத நிலையிலும். புலிகள் சார்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட அரசியல் பிரிவுத் துணைத் தலைவர் கரிகாலன். எஸ்.இளம்பரிதி. ஏ.ரவி. எஸ். டொமினிக் ஆகியோர் அறிவிக்கப்பட்டனர். பொருட்கள் நடமாட்டத்துக்குண்டான தடையை நீக்குவது பேச்சுவார்த்தையில் முக்கிய அம்சமாக இருந்தது.

இவ்வாறு கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலும். கடற்படைத் தாக்குதலும். புலிகளின் எதிர்த்தாக்குதலும் மன்னார் பகுதியில் நடந்து கொண்டுதான் இருந்தது. செப்டெம்பர் 19ல் நடைபெற்ற தீவிரமான தாக்குதலில். சிங்களக் கடற்படையின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதில் 24 வீரர்கள் கொல்லப்பட்டனர். கடலில் மூழ்க இருந்த கப்பலின் கப்டனும் இதர அதிகாரிகளும் காப்பாற்றப்பட்டு. போர்க் கைதிகளாக்கப்பட்டனர். இவ்வகையான தாக்குதலில் புலிகள் மகிழ்ச்சி அடையாத நிலையிலும். செப்ரெம்பர் 21ம் திகதி சந்திரிக்கா பிரபாகரனுக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில். பேச்சுவார்த்தைக்கான அரசுப் பிரதிநிதிகள் பட்டியல் தெரிவிக்கப்பட்டிருந்தது. பிரதமரின் செயலாளர் பாலபட்டபெந்தி. சுற்றுலாச் செயலாளர் லயனல் பெர்னாண்டோ. பேங்க் ஒப் சிலோன் தலைவர் ஆர்.ஆசீர்வாதம். கட்டட நிர்மாணப் பிரிவு தலைவர் என்.எல். குணரத்ன ஆகியோர் பேச்சுவார்த்தையில் பங்கேற்பர் என்றும். ஒக்டோபர் மாதத்தில் 30ம் திகதியிலிருந்து 6ம் திகதிக்குள் ஒரு நாளும். 12ம் திகதியிலிருந்து 15ம் திகதிக்குள் ஒரு நாளும் சந்தித்துப் பேசுவார்கள் என்றும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

11ஆம் பக்கம் பார்க்க...

**மறவன்**

# தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையே வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்கும்



தமிழ்த் தரப்பின் ஒற்றுமை என்பது 22 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த போது மட்டுமே அது உறுதிப்படுத்தப்பட்டது. சகோதரப்படுகொலை என்பது தான் ஆயுத குழுக்களுக்கிடையே குழப்பங்களை உருவாக்கியது. இதனால் ஆயிரக்கணக்கான தமிழ் போராளிகள் வடக்கிலும், கிழக்கிலும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், ஈ.பி.டி.பி போன்ற இயக்கங்களும் அடங்கும். தமிழினத்தின் போராட்ட வரலாறு என்பது இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரே எழுதப்பட்டதொன்று. தமிழினத்தை பிரித்தாள வேண்டும் என்ற தந்திரோபாயத்தை டட்லி சேனாநாயக்க தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரை கையாண்டு வந்தனர் என்பது நிதர்சனமான உண்மை. தமிழினத்தின் போராட்ட வடிவத்தை அல்லது அதனுடைய முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் வகையில் அரசாங்கம் தமிழ் புத்திஜீவிகளை ஆயுததாரிகளை வைத்தே கொலை செய்தது. இதில் மாண்டு போனவர்கள் தமிழ் அரசியல் புத்திஜீவிகளே. அல்பிரட் துரையப்பா தொடக்கம் லக்ஸ்மன் கதிர்காமர் வரையிலும் 172 வரையிலானவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள்.

யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற பொழுது தமிழ் மக்கள் அனைவரும் தீவிரவாதிகளாகவே பார்க்கப்பட்டு வந்தனர். இந்த அரசாங்கமானது இந்த போரை முடிவிற்கு கொண்டு வருவதற்காக முதலில் இந்திய அரசாங்கத்திற்கும், தமிழ் போராளிகளுக்கும் இடையில் பிரிவினைகளை உருவாக்கி அதில் வெற்றி கண்டது. வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை தமிழ் போராளிகளிடம் கையளித்துப் போவதற்காகவே இந்திய அரசாங்கம் 1987களில் ஒப்பரேசன் பூமாலை என்ற இராணுவ நடவடிக்கையோடு வடமராட்சியில் முதன்முதலாக உணவுப் பொதிகளை போட்டிருந்தது. இந்தியாவினுடைய பூரண ஆதரவு இருந்ததன் நிமித்தமாக 30 ஆண்டுகால போரை முன்னெடுத்து செல்லக்கூடிய பாலமாக இந்திய அரசு செயற்பட்டது. தமிழ் போராளிகளுக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் பாரிய பிளவுகளை ஏற்படுத்திய ஒரு விடயமாகத்தான் இந்திய பிரதமர் ரஜீவ் காந்தியினுடைய கொலை சம்பவம் இடம்பெற்றது.

விடுதலைப்புலிகளினுடைய வளர்ச்சிக்கு அதன் பின்னர் இலங்கை அரசு குறிப்பாக ரணசிங்க பிரேமதாச அவர்கள் பெருமளவு ஆயுதங்கள், வாகனங்கள், மருந்துப்பொருட்கள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை வழங்கி, இந்திய இராணுவத்தை எதிர்த்து போராடுவதற்கான ஒரு நிலைமையை உருவாக்கினார். அந்த அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இந்திய அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்களை நடத்தினார்கள். இதில் இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு தியாகி திலீபனு டைய உண்ணாவிரதப் போராட்டம் பாரிய பங்களிப்பை வழங்கியது. நிரந்தர பகைமையை இந்தியாவிடமிருந்து உருவாக்கிய இலங்கை அரசானது தமிழினத்தை தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழினத்தின் மீது போரை கட்டவிழ்த்துவிட்டிருந்தது. இதனோடு தொடர்ந்த போராட்டம் இந்தியா, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட 54 நாடுகளுடன் போரை முன்னெடுக்கவேண்டிய தேவை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டிருந்தது. இந்த போரானது முள்ளிவாய்க்காலுடன் முடிவுற்றது அனைவரும் அறிந்த விடயம். இதற்கு பின்னரான அரசியல் நடவடிக்கைகள் அனைத்திலும் தமிழ் தரப்பு கோட்டை விட்டது என்றே சொல்லலாம். தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாதொழிக்கின்ற நடவடிக்கைகளையே மாறி மாறி வந்த அரசாங்கங்கள் முன்னெடுத்தன. விடுதலைப்புலிகளுடைய போராட்டம் முற்றுப்பெற்றதற்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவரும் முக்கிய காரணமாவார். தமிழினத்திற்கு செய்த துரோகத்தின் நிமித்தம் இன்று அவர் பாராளுமன்றத்திற்குக் கூட செல்ல முடியாத சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

நல்லாட்சி அரசாங்கம் தம்மை ஒரு வெண்புறாவாக காண்பித்தது. சந்தர்ப்பம் பார்த்து கழுத்தறுக்கும் நடவடிக்கைகளையே அந்த அரசாங்கம் மேற்கொண்டது. அதன் பின்னர் இனவாதத்தை விதைத்துக்கொண்டு ஜனாதிபதியும், பிரதமரும் தனிச் சிங்கள பெரும்பான்மையினால் நாம் ஆட்சி அமைக்க முடியும் என்ற அளவிற்கு தமிழ் - சிங்கள - முஸ்லிம் என இனவாதத்தை விதைத்தார்கள். தமிழினத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் முஸ்லிம்களையும் இணைத்துக்கொண்ட இவர்கள் பின்னர் முஸ்லிம்களையும் ஓரங்கட்டும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இன்று முஸ்லிம்களுடைய தலையீடு இல்லாமலேயே அனைத்து விடயங்களும் நடந்தேறுகிறது எனலாம். இதிலிருந்து நாம் எதனை விளங்கிக்கொள்கின்றோம் என்றால் நமக்கான தீர்வினை நாமே பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளோம் என்பதாகும். ஆகவே நாம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அடிப்படையில் எமது இனத்தின் விடுதலைக்காக அகிம்சை ரீதியான போராட்டங்களை தமிழ் கட்சிகளுடைய பேதங்களை மறந்து செயற்படவேண்டும் என்பதேயாகும்.

30 ஆண்டுகால யுத்தத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளே பாரிய வெற்றியை ஈட்டியிருக்கிறார்கள். முகாம்களை தளர்க்கும் சந்தர்ப்பங்களில் எத்தனையோ இராணுவ உயிர்கள் அங்கு பலிக்கடாயாக்கப்பட்டது. உதவி செய்யாவிட்டாலும் உபத்திரம் செய்யாமல் இருப்பது நல்லது என்பதுமாப்போல் தமிழீழ விடுதலைப்புலிகள் போராடிக்கொண்டிருந்த பொழுது அவர்களை போராட அப்படியே விட்டிருக்கலாம். அவர்களை காட்டிக்கொடுத்த தமிழ் ஆயுத கட்சிகள் இன்று முதலைக்கண்ணீர் வடிக்கிறார்கள். தமிழர்களின் பிரதேசங்களில் நினைவு சின்னங்களை வைப்பதற்கும், கட்டடங்களை அமைப்பதற்கும், மாவீரர்களுக்கான நினைவஞ்சலியை செலுத்துவதற்கும் அரசாங்கத்திடம் அனுமதி கேட்க வேண்டுமாக இருந்தால் அப்படிப்பட்ட உரிமை எமக்குத் தேவையில்லை.

**"முள்ளிவாய்க்கால் என்பது தமிழினத்தின் போராட்டத்தின் முடிவல்ல அது தொடர்கதை"**

அரசாங்கத்திற்கு சிறிதும் அடிபணியாத தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் தமக்கான ஒரு சொத்துக்களையும் சேகரித்துக்கொள்ளாது முழு அர்ப்பணிப்புடன் நீதி,நிர்வாகம் உட்பட படைக்கட்டுமானங்களிலே கடல், வான், தரை என்று 58 கட்டமைப்புக்களை துறை சார்ந்து வைத்திருந்தார். இதனால் தனிநாடு ஒன்று இலங்கையில் உருவாக்கப்பட்டுவிடும் என்ற அச்சத்தினால் இந்திய அரசாங்கம் தனக்கு பாதகத்தை உருவாக்கும் என்று கருதியதால் விடுதலைப்புலிகளை இல்லாதொழிக்க பிரபாகரனுடைய தலைமையை தவிர்த்து வேறொரு தலைமையை உருவாக்கிக்கொள்ள முற்பட்டார்கள். அதனுடைய பிரதிபலிப்பே இன்று இலங்கையில் இடம்பெறுகிறது. ஆனால் அவர்கள் மீண்டும் இந்த இலங்கைக்குள் தனது ஆதிக்கத்தை செலுத்துவதற்கு சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் இடையூறாக இருப்பது மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை முன்கொண்டு செல்வதற்கான நடவடிக்கையாகவே இது அமையப்பெறுகிறது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஒன்றில் பலப்படுத்த வேண்டும் அல்லது பொதுவான ஒரு பொதுத்தலைமை உருவாக்கப்பட்டு தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் நோக்கி நகர்த்தப்படவேண்டும். குறிப்பாக ஈபிடிபி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி என்னும் தமிழ் மக்களை பிரதிபலிக்கின்ற கட்சிகள் ஒன்றிணைவதனூடாக சிங்கள இனவாத ஆதிக்கத்தை குழிதோன்றி புதைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

தமிழ் தரப்பின் எந்த கட்சிகளாக இருந்தாலும் அரசாங்கத்தினால் முற்று முழுதாக பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். ஆயுதத்தினால் வெல்ல முடியாததை அகிம்சை போராட்டத்தினால் வெல்ல முடியும். தமிழ்த் தலைமைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பிரிந்து செயற்படுவதனால் தமிழ் மக்களின் தீர்வு என்ற விடயத்திலும், இனப்படுகொலை என்ற விடயத்திலும், கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் விடுதலை, காணி பொலிஸ் அதிகாரத்திலும் நாம் ஒன்றையேனும் நிலைநிறுத்த முடியாமல் உள்ளது. தவறு எங்கே நடந்திருக்கிறது என்பதை பார்த்து அந்த தவறை திருத்திக்கொள்ள வேண்டுமே தவிர தொடர்ந்தும் தவறை இழைக்கக்கூடாது என்பதே இன்றைய நிலைப்பாடு. ஆகவே தமிழ்க் கட்சிகள் ஒருவரையொருவர் எதிர் தாக்குதலை செய்வதை விட்டுவிட்டு ஒன்றிணைந்து நாட்டுக்குள் தமிழ் மக்களுக்காக வடகிழக்கிணைந்த ஒரு தமிழர் தாயகத்தை வென்றெடுக்கும் நிலைப்பாட்டில் செயற்படுவோமாக. அவ்வாறு செயற்படுவதனூடாக இன்னும் 10 ஆண்டு காலத்திற்குள் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். இல்லையேல் மீண்டும் ஒரு வன்முறை கலாச்சாரம் இந்த நாட்டிற்குள் ஏற்படுத்தப்பட்டு தமிழ் இனம் இந்த நாட்டை ஆளுகின்ற சூழல் உருவாகும்.

**நெற்றிபொறியன்**

# பிள்ளையானின் தமிழ் இன விரோத கருத்துக்கள் - வடகிழக்கில் மீண்டும் ஆபத்து

வன்னித் தலைமை பிரபாகரன் துரோகம் இழைத்ததாகக் கூறும் பிள்ளையான், கருணா அம்மானுடன் தாங்கள் பிளவுபட்டு அன்று கோட்டபாய ராஜபக்சவின் ஆதரவோடு கருணா - பிள்ளையான் குழு என்று மாறிமாறி சுட்டதை மறந்து பேசுகிறீர்களா பிள்ளையான் அவர்களே! கிழக்கை பிரித்ததில் முஸ்லீம் அரசியல் தலைவர்களுக்கே முக்கிய பங்கு உண்டு. அவர்களுடனும் ஹிஸ்புல்லாவுடனும் ஒட்டி உறவாடி விட்டு இப்படி பிரதேசவாதத்தை கையில் எடுக்கக்கூடாது பிள்ளையான் அவர்களே! வெளிக்கந்தை பகுதியில் TRO பணியாளர்களை கடத்தி கொலை செய்தது யார்? மனச்சாட்சி சொல்லும். பிரசாந்தனை தங்களுடைய முகாமிற்கு அழைத்து சென்று பயமுறுத்தி வன்னிப் புலிகளுடன் செயற்பட்டால் சுட்டுக்கொல்வோம் என்று சொல்லி அனுப்பியதை நீங்கள் மறக்கலாம். பிரசாந்தனை காப்பாற்றியதை நாம் மறக்கவில்லை. அரசாங்கம் ஏவிவிட்டு எத்தனை அடிதடி கொலைகள் இடம்பெற்றது. நாங்களும் உங்கள் பாசறைக்குள் வந்து போராடியமதுசகாக்களைகாப்பாற்றியவர்கள். பிள்ளையான் அவர்களே விடயங்கள் தெரியாத ஊடகவியலாளர் என்பதால் உங்களிடம் கேள்விகள் கேட்க துணியவில்லை.

ஜோசப் பரராஜசிங்கத்தை நீங்கள் சுடவில்லை என்பதை உங்கள் செயலாளர் பிரசாந்தனிடம் தாங்கள் பிடிபட்ட காலத்தில் இருந்தே சொல்லிய ஊடகவியலாளர் நான். தேர்தலுக்கு முன்பும் சொன்னேன். இப்பவும் சொல்கிறேன். தங்களை சிறையில் பார்க்க வந்தபோதும் சொன்னேன். கருணா அம்மான் விட்ட பிழையை பிரதேச வாதத்தை நீங்களும் தற்போது கையில் எடுக்கிறீர்கள். இது தவறு. உங்களுடைய அணி மட்டக்களப்பில் என்னை நான்கு தடவைகள் துரத்தித் துரத்திச் சுட்டார்கள். எமது தந்திரோபாயத்தைப் பயன்படுத்தி தப்பினோம். உங்கள் அணியில் போட்டியிட்ட அனைவரையும் எனக்கு நன்கு தெரியும். எனது நண்பர்கள். அரசியலில் கருத்து வேறுபாடு உள்ளவர்கள். அவ்வளவுதான். பிரதீப் மாஸ்டர் கூட என்னை சுடவந்த தங்கள் அணியில் இருந்து என்னை காப்பாற்றியவர்.நாம் அனைவரும் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்காக தலைவனின் வழியில் போராடியவர்கள். பிரதீப் மாஸ்டர் விடுதலைப்புலிகளில் இருந்தபோது எப்படி செயற்பட்டார் என்பது கூட உங்களுக்கு தெரிய வாய்ப்பில்லை. ரகு அண்ணனை சுட்டது யார் என்பது எனக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும்.

கூடுதலாக அரசாங்கம் தமிழரை மோதவிட்டு வேடிக்கை பார்த்தது. இதுதான் உண்மை.அரச கைக்கூலிகளாக செயற்படும் வரைக்குமே தங்களுக்கு பாதுகாப்பு. உங்களின் அரசியல் பிழைப்புக்காக வன்னி யாழ்ப்பாணம் என்று பிள்ளையான் அவர்களே பேசாதீர்கள். ஜோசப் பரராஜசிங்கத்தை சுட்டுவிட்டு கொன்மன்ட் பாடசாலைக்கு அருகில் அப்போது இருந்த பேக்கரிக்கு பக்கத்தால் ஓடி ஈரோஸ் பிரபாவினுடைய கேம்புக்குள் இருந்து பற்பொடி கொம்பனிக்குள் குயிலி தீசன் அரச கைக்கூலிகளுடன் இணைந்து கொண்டவர்கள்தான் இந்தகொலைகாரர்கள். இதுபற்றி நிறைய சொல்லலாம். யார் யாரை யார் சுட்டுக்கொன்றது என்று.

தற்போதைக்கு ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மீண்டும் கிழக்கில் கருணா பிள்ளையான் பிளவுகளை அரசாங்கம் ஏற்படுத்தும். மாறிமாறி சுட்டுவிட்டு பழியை தமிழர்கள் மீது போடுவார்கள். இதுதான் நடந்தது. இனியபாரதி எனது நண்பன் தான் திறமைசாலி. அம்பாறை காட்டுக்குள் 5 பேருடன் தனது அணியை வலுப்பெற செய்து கருணா அம்மானை காப்பாற்றிய பங்கு அவருக்கு உண்டு. தயவுசெய்து தமிழன் ஒற்றுமையாக செயல்பட்டால் அசைக்க முடியாது. தேசியத்தலைவர் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தாதீர்கள். மாவீரர்களின் தியாகங்கள் அளப்பரியது. கருணா பிளவுபடாதிருந்தால் இன்று தமிழ் ஈழம் என்பது உறுதி. அரசாங்கம் எமக்கு செய்த துரோகத்தை அடியோடு மறந்து பேசக்கூடாது. அரசாங்கம் தற்போதும் எம் இனத்தை அடிமைப்படுத்தவே அனைத்து நடவடிக்கைகளையும் செய்கிறது என்பதை புரிந்து செயல்படுவோம். நாங்களும் 5 வருடங்களுக்கு மேலாக சிறை அனுபவித்தவர்கள். சொல்வதற்கு நிறைய உண்டு. ஊடக சந்திப்பில் தங்களின் கருத்து இரத்தக்கறை படியாதவர்கள் போல் பேசவேண்டாம். செல்பி எடுக்கும் ஊடகவியலாளர்கள் நாங்கள் அல்ல. உங்களோடு களத்தில் நின்று மட்டக்களப்பில் பல உயிர்களை காப்பாற்றியவன். உங்கள் சேவை தொடரட்டும். நாம் எமது சேவையை தொடர்கிறோம். எம்மை கொல்ல வரும் ஒருவனை வேடிக்கை பார்க்கக்கூடாது அது யாராக இருந்தாலும் சரி. அவ்வளவுதான்.

பிள்ளையான் தெரிவித்த கருத்துக்களை நாம் செவிமடுக்கும் பொழுது தமிழினத்துடன் தமிழினத்தை மோதவிடுவதற்கான சமிக்ஞைகளையே காட்டுகின்றன. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அந்த அடிப்படையிலே என்னுடைய கட்சிக்கும் எனக்கும் தை பிறந்தால் வழி பிறக்கும். நாளை தைப்பொங்கல் எனக்கான நீதித்துறையினுடைய அறிவிப்பு வந்திருக்கிறது. மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் என்னுடைய வழக்கிலிருந்து என்னை முழுமையாக விடுவித்து விடுதலை செய்திருக்கிறது. 2015 ஆம் ஆண்டு 10ம் மாதம் 11 ஆம் திகதி கொழும்பிலே சிஐடியினுடைய இடத்திற்கு சென்ற பொழுது ஊடகங்களிற்கு முன்னே நல்லாட்சி அரசாங்கம் என்னை பழிவாங்க நினைக்கிறது. யாரிற்கும் பாவிக்க முடியாத சட்டங்கள் எல்லாத்தையும் அப்பாவியாக அரசியல் செய்து கொண்டிருக்கும் எனக்கு பாவிக்க முனைகிறது என்று சொல்லி விட்டுச்சென்றேன். நான் கிட்டத்தட்ட 1869 நாட்கள் சிறைச்சாலையிலே வாடினேன். உங்களுக்கு தெரியும் சிறைச்சாலை என்றால் எவ்வாறான நிலைமையில் இருக்கும் என்று. சாப்பாட்டிலிருந்து படுக்கையிலிருந்து மழை பெய்தால் குளிரடித்தால், புழுதி அவ்வாறான சொல்ல முடியாத துன்பங்கள் சிறைச்சாலையிலே இருக்கின்றது. அப்படியெல்லாம் என்னை அடைத்து நசுக்கி நான் முன்னாள் முதலமைச்சராகவும் மாகாணசபை உறுப்பினராகவும் இருந்தபொழுது மெச்சினார்கள். காரணம் என்ன நூறு வீதம் 2015 ஆம் ஆண்டு வந்த நல்லாட்சி தங்களோடு வந்தவர்களுக்கு கொடுத்த பரிசாக இதை செய்தார்கள். அவர்களுக்கு முண்டு கொடுத்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேண்டுகோளின் இணங்க மைத்திரிபால சிறிசேன அவர்கள் கையெழுத்திட்டதனூடாக நான்வாடினேன். ஆனால் நான் அன்று கூறிய விடயம் அடிக்கடி சிறைச்சாலையிலிருந்து வெளியில் வருகின்ற பொழுது மாகாண சபைகளில் சொன்ன விடயம் என்னை வரலாறு விடுதலை செய்யும் எனக்கு நம்பிக்கை இருந்தது. இந்த வழக்கில் எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை. ஜோசப் பரராஜசிங்கம் என்பவரை நான் கண்டதே கிடையாது. ஒருமுறை குறோட்டான் சேனையிலிருந்து வருகின்ற பொழுது ஒரு ஆர்ப்பாட்டத்தை மக்கள் செய்த பொழுது மாத்திரம் நான் கிட்டத்தட்ட 100 மீற்றருக்கு அப்பால் நின்று பார்த்திருக்கிறேன். அவரிற்கு வாக்களித்ததும் இல்லை அவரை அருகில் சென்று பார்த்ததும் இல்லை. அவருடன் எந்தவிதமான அரசியல் விரோதமும் எனக்கு இல்லை. அதைப்போன்று ஜோசப் பரராஜசிங்கம் மரணித்த பொழுது 2005 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்பொழுது நான் அரசியலில் இருக்கவும் இல்லை. அரசியல் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் இல்லை. அரசியலுக்காக எந்தவிதமான ஊக்குவிப்பையும் எடுத்த மனிதனுமல்ல நான். 2008 ஆம் ஆண்டு தான் மாகாண சபை தேர்தலில் போட்டிபோட்டேன். அந்த நேரத்தில் தான் நான் முதலாவது வாக்கைக்கூட செலுத்தினேன். ஆனாலும் அந்த தேர்தலிலும் கூட முதலமைச்சராக வரவேண்டுமாகவிருந்தால் முன்னாள் அரசாங்க அதிபர் மௌனகுரு சாமியை நிறுத்துவது அல்லது எங்களின் கட்சியின் தலைவர் ரகு அண்ணா அவர்கள் தற்பொழுது மரணித்து விட்டார். அவரை முதலமைச்சராக நியமிப்பது என்று தான் நான் போட்டியிட்டேன். இருந்தாலும் கால சூழ்நிலை என்னை முதலமைச்சராக்கியது. ஆகையால் அக்கிரமம் செய்து அரசியலுக்கு வரவேண்டிய தேவை எங்களுக்கு இருக்கவில்லை. இருந்தாலும்கூட தமிழ் தேசிய வாதிகள் என்று பொய்யாக நடிக்கின்ற மக்களை உசுப்பேத்துகின்ற வேடதார கூட்டம் என்னை கிழக்கிலே வளரவைத்தால் அவர்களின் அரசியல் அழிந்துவிடும் அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து வந்து இங்கு தேர்தல் கேட்க முடியாது என்று உறுதியாக நம்பியவர்கள் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்த பிதாமக்கள் அவர்களுடைய வாரிசுகளாக இருப்பவர்களை வைத்து நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கி அவர்களூடாக என்னை அடைப்பதற்கு முயற்சியெடுத்து அடைத்தார்கள். நான் நீதித்துறையை நம்பி பலமுறை வாதாடினேன்.



என்னை கைது செய்த காலத்திலே உங்களுக்கு தெரியும். மாகாண சபை உறுப்பினராக இருக்கும் பொழுது மக்களின் பிரதிநிதியை அடைப்பது என்பது மக்களுடைய குரல்வளையை நசுக்குவதற்கு சமன். இன்று நீதிபதி அவர்களும் அதை அவருடைய தீர்ப்பிலே எழுதியிருக்கிறார். தீர்ப்பு இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்ததும் ஊடகத்திற்கு தருகிறோம். மட்டக்களப்பு மாவட்டத்திலே 2005, 2006 ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலே எத்தனை கொலைகள் இடம்பெற்றது. ஜோசப் பரராஜசிங்கம் என்பவர் 2005 ஆம் ஆண்டு தோற்றார். ஆனால் வென்றவர்களை விடுதலைப்புலிகள் சுட்டுதள்ளிவிட்டு அவர்களுக்குரிய அவரை அந்த மாவட்டத்திலே நியமித்தார்கள். தற்பொழுதும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டிபோட்டு இறந்தவர்களுக்கு எந்தவிதமான விசாரணையும் இல்லை. ஒருவர் இறந்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாரிசு என்று அவரையும் முன்னிலைப்படுத்துகிறார்கள். உங்களுக்கு தெரியும் நள்ளிரவில் யாராவது கொல்லப்பட்டால் ஊடகத்துறையினர் நீங்கள் கைலைட் பன்னி பிரதான செய்தி தலைப்பிலே இடுகின்றீர்கள். அவ்வாறு போடுகின்ற பொழுது உங்களது மனசாட்சியை கேளுங்கள் தற்பொழுதும் அந்த தேவாலயம் மட்டக்களப்பிலே இருக்கிறது. நானும் மட்டக்களப்பிலே இருக்கிறேன். தற்பொழுது இருக்கின்ற ஆண்டகையை நான் நம்புகிறேன். அங்கு எத்தனையோ பூசைகள் நடக்கின்ற பொழுது என்னை யாராவது கண்டார்களா? அல்லது யாராவது நான் கூறினேன் என்று உறுதியாக சொன்னார்களா? ஒன்றுமில்லை. எந்தவிதமான கண்ட, தொழினுட்ப எந்தவிதமான சாட்சிகளும் இல்லாமலும் என்னை அடைத்தார்கள். ஆனாலும் அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் தங்களின் அரசியலுக்காக அல்லது ஊடகங்களிலே பணியாற்றுபவர்கள் தங்களின் ஊடக நிறுவனங்களின் வளர்ச்சிகளுக்காகவும் எங்களைக் கைதிகளாகப் பயன்படுத்தினார்களே தவிர, நாங்கள் அடிபட்டு குரல்வளை நசுக்கப்பட்டு எங்களின் குடும்பங்களும் கட்சி ஆதரவாளர்களும், தொண்டர்களும் கண்ணீர்விட்ட பொழுதும் எந்த ஊடகங்களும் உதவி செய்யவில்லை.

பிள்ளையானினுடைய தம்பியின் மனைவி அடிக்கப்பட்டு சிஐடியால் ஒதுக்கப்பட்ட பொழுது எந்த பெண்ணியல்வாதியும் வந்து குரல் கொடுக்கவில்லை. எவ்வளவு அசிங்கமான பணிகளை இந்த நல்லாட்சி அரசாங்கம் இயற்றியது, நடத்திக்காட்டியது, யாரும் கண்டுகொள்ளவில்லை. இன்று ஊடக தர்மம், சம தர்மம், சட்டம், பயங்கரவாத தடைச்சட்டத்திலே கைதிகளை படுக்க வைக்கக்கூடாது. அது மோசமான சட்டம் என்று குரல் கொடுக்கிறார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தை உருவாக்கிய பிதா மக்கள் என்னை மட்டும் அதிலே தண்டிக்க வேண்டும் மற்றவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என இரட்டை முகத்தை காட்டியிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற பல எம்பிமார்கள் அனைவரும். என்ன நியாயம், என்ன அடிப்படை தர்மம் நான் ஒரு போராட்ட அமைப்பிலே சேர்ந்து போராடியது மட்டுமா குற்றம்? அல்லது இன்று நசுக்கப்பட்டிருக்கின்ற ஏழை எளிய மக்களுக்காக பணி செய்வது என்னுடைய குற்றமா? அல்லது நீங்கள் வெறுத்தொதுக்கிய மாகாணசபையை எடுத்து அதிகார பகிர்வு என்றால் என்ன? மாகாணசபை முறைமையை நம்புங்கள் மக்களே! முதலமைச்சரால் இப்படி பணியை செய்து காட்ட முடியும் என்று செய்து காட்டியது குற்றமா? எங்களை அகற்றிவிட்டு நீங்கள் அந்த இடத்தை தக்க வைப்பதற்கு அல்லது உங்களின் கைக்கூலிகளை கொண்டுவிட்டு வேலை செய்வதற்கான திட்டங்களை வகுக்கின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு தோற்றுப்போயுள்ள அசிங்கங்களை போய் யாழ்ப்பாணத்திலே பார்க்க முடியும்.

ஆகையால் எங்களுடைய மக்கள் ஆதரவாளர்களை நம்ப வேண்டும். நான் மீண்டும் மீண்டும் சொன்னேன் வரலாறு என்னை விடுதலை செய்யும் நான் குற்றம் அற்றவன். எந்தவிதமான களங்கமற்றவன். இன்று நீதித்துறைக்கு நன்றி செலுத்துகின்றேன். நீதித்துறை தன்னுடைய அறிவிப்பிலே மிகத்தெளிவாக சொல்லியிருக்கிறது பிள்ளையானுக்கு இந்த வழக்கில் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்று. அழகான வெள்ளைத் தாளிலே என்னை கழுவி விடுதலை செய்திருக்கிறது. ஆகையால் நீதித்துறைக்கும் என்னுடைய விடுதலைக்காக போராடிய சட்டத்துறையினருக்கும் குறிப்பாக அணில் சில்வா அவர்களுக்கும் அவரின் குலாமிற்கும் நான் நன்றி சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். தலை வணங்குகின்றேன். தமிழர்கள் பல சட்டங்களில் இருந்தாலும் எங்களுடைய வழக்கை பார்க்கவும் இல்லை. குறிப்பாக சிலவேளைகளிலே வேதனையான பல சம்பவங்களும் நீதித்துறையிலே இடம்பெற்றது. நான் மாகாணசபை உறுப்பினராக இருந்துகொண்டு மூன்று வருடங்களுக்கு முன்னரே உயர் நீதிமன்றில் பிணை கேட்டிருந்தேன். அந்த பிணை கூட மறுக்கப்பட்டது. சில நேரங்களிலே நீதித்துறைக்குள் இருப்பவர்களும் தங்களுடைய பதவி உயர்வுக்காக எங்களுடைய வேண்டுகோளைக்கூட ஏற்க மறுத்த சம்பவங்களும் இருக்கிறது.

**தொடரும்...**

**இரணியன்**

# மாகாணசபைத் தேர்தலும், வடகிழக்கை குறிவைக்கும் அரசின் காய்நகர்த்தல்களும்

தமிழினம் தனது தன்னாட்சி உரிமை கோரி கடந்த 30 ஆண்டுகாலமாக போராடி வந்தனர். தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளும் நிலை உருவாக வேண்டும் என்றும் தமது சுயநிர்ணயம், கலை, கலாச்சாரம், தமது இருப்பு அனைத்தையும் நிலைப்படுத்த பல அளப்பெரும் தியாகங்கள் புரிந்து தமது போராட்டத்தை தொடர்ந்தனர். சிங்கள பேரினவாத பௌத்த சித்தாந்தம் கொண்ட அரசுகளுடன் பேசிப் பயனில்லை. அத்துடன் எமது இனத்தின் அழிவை தடுக்கவும் எமது உரிமையை பாதுகாக்கவும் தனித் தமிழீழமே ஒரே தீர்வு, ஒரே முடிவு என்ற கொள்கைத் திட்டத்துடன் விடுதலைப்புலிகள் அமைப்பும் போராடியது. இப் போராட்டங்களில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை இழந்து பலகோடி பெறுமதியான சொத்துக்களை இழந்து போராடினார்கள்.

போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் இந்தியா அரசின் உதவியுடன் திம்பு பேச்சுவார்த்தை என பல பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. தனித் தமிழீழ கோரிக்கை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கையின் பேரினவாத அரசுகள் கூறிவந்த நிலையில் இந்தியா - திம்பு பேச்சுவார்த்தையில் இலங்கைவாழ் தமிழர்களுக்கு மாநில சுயாட்சி அடிப்படையில் தீர்வைப் பெற அரசுக்கு அக்காலத்தில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டது.ஏனெனில்இங்குஓர் தனித்தமிழீழம்உருவாகுவதைஇந்தியா ஒரு போதும் விரும்பவில்லை. தனது நாட்டில் காணப்படும் மாநில சுயாட்சி முறையை இலங்கையில் அமுல்படுத்த இந்தியா முயற்சித்தது. ஆனால் விடுதலைப்புலிகளின் தலைமையும் மாநில சுயாட்சி முறையை ஏற்கவில்லை. அத்துடன் இலங்கை அரசும் அதற்கு இடம்கொடுக்கவில்லை.


இந்நிலையில் 1987ஆம் ஆண்டு அப்போதைய இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கும் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கும் இடையேயான ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியா தனது இராணுவத்தை அமைதிப்படை என்னும் பெயரில் இலங்கைக்கு அனுப்பியது. தமிழர்களை காக்கவும் தமிழர்களுக்கு ஓர் நிரந்தரத் தீர்வை பெற்று தருவோம் எனக்கூறி விடுதலைப்புலிகளை ஆயுதங்களை கையளிக்குமாறு கோரி, தமிழர்களுக்கு பாதுகாப்பாக தாங்கள் இருப்போம் எனச் சொல்லி, விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கையளித்த பின்னர் ஜனாதிபதி ஜே.ஆர் அவர்களின் நரித்தன செயற்பாட்டால் விடுதலைப்புலிகளுக்கும், இந்தியா அமைதிப்படை என சொல்லி வந்த இந்தியா இராணுவத்துக்கும் இடையில் பெரும் போர் ஏற்பட்டது.

இப்போரில் தம்மை காக்க வந்த இந்தியப்படைகளே தமிழர்களின் அழிவுக்கு காரணமானவர்கள். பல்லாயிரக்கணக்கான அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். விடுதலைப் புலிகளால் தடை செய்யப்பட்ட தமிழ் இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ போன்ற அமைப்புகள் இந்தியா இராணுவத்துடன் இணைந்து தமிழ் மக்களை கொன்றொழித்தனர். இந்நிலையில் வடகிழக்கு இணைக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் அங்கீகாரம் இன்றி தமிழ் மக்களின் ஆதரவு இன்றி இந்தியா மத்திய அரசின் ஆதரவுடன் இந்தியா இராணுவ கண்காணிப்பில் முதலாவது மாகாணசபை தேர்தல் இடம்பெற்று அதில் ஈ.பி.ஆர். எல்.எப் அமைப்பின் வரதராஜப் பெருமாள் அவர்கள் வடகிழக்கு மாகாண முதலமைச்சர் ஆனார். இந்த மாகாணசபையில் பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டது. அத்துடன் தனி இராணுவம் அவ்வியக்கத்தால் அமைக்கப்பட்டது. அவ் முதல்வர் ஆட்சியானது இந்தியா இராணுவம் இலங்கை மண்ணில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் வரதராஜப் பெருமாள் அவர்கள் இந்தியாவுக்கு தப்பியோடினார். மீண்டும் வடகிழக்கு பகுதி புலிகளின் ஆளுகைக்குள் உட்பட்டது. இவ்வாறு அந்த மாகாணசபை இரண்டு வருடங்களில் செயலற்று போனது. 2009 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் தமிழர்களின் சுயநிர்ணய போராட்டம் உலக வல்லரசுகளின் உதவியுடன் முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு மீண்டும் வட கிழக்கு பிரிக்கப்பட்டு மாகாண சபை தேர்தல் இடம்பெற்றது. இதில் விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது முதல்வர் வேட்பாளராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை வட பகுதியில் களமிறக்கி வெற்றி பெற்றனர். வட பகுதி முதலமைச்சர் ஆனார் சி.வி.விக்னேஸ்வரன். கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலகிய தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் அவர்கள் முதலமைச்சர் ஆனார். இந்நிலையில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 வரை இம் மாகாணசபை செயற்பாடுகள் இடம்பெற்று வந்தன.

இம் மாகாணசபையில் காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் என்பன நீக்கப்பட்டு இருந்தன. சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் 5 அமைச்சர்கள் வடக்கில் மாகாணசபை ஆட்சியில் இருந்தனர். இவ் மாகாணசபை ஆட்சியில் வடபகுதியில் பெரிதாக எதுவித அபிவிருத்திகளும் இடம் பெறவில்லை. அத்துடன் இம் மாகாணசபையில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாக கூறி அதில் அங்கம் வகித்த சில அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இவ்வாறு ஓர் குழப்பமான மாகாணசபையாக காணப்பட்ட வட மாகாணசபை 2015 மைத்திரி - ரணில் நல்லாட்சியுடன் கலைக்கப்பட்டது. 2015 தொடக்கம் தற்பொழுது வரை வடகிழக்கு பகுதிகளில்ஆளுநர்கள்நியமிக்கப்பட்டு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. 2015 தொடக்கம் 2019 வரையான மைத்திரி - ரணில் நல்லாட்சியில் தமிழர்களுக்கு எவ்வித விமோசனமும் கிடைக்கவில்லை. இவ் ஆட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதுணையாக இருந்தமையானது தமிழ் மக்கள் தரப்பில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இவ்வாட்சி காலத்தில் எதிர்க்கட்சி தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் இருந்தார்.

இந்நிலையில் மைத்திரி - ரணில் கொண்டு வந்த பாதீடுகளை கூட எதிர்க்கட்சியாக இருந்த சம்பந்தன் அவர்கள் ஆதரித்தமையானது பலரது விசனத்துக்குள்ளானது. அரசியல்



கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான முடிவு, அபிவிருத்திகள், வேலை வாய்ப்புகள் என அனைத்தும் செயலற்றதாகவே இருந்தது. இருந்தும் அவ்வாட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மீண்டும் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது. இதில் பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளராக களமிறக்கப்பட்ட கோட்டபாய ராஜபக்ச அவர்கள் பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளால் அமோக வெற்றியீட்டினார். அவரை எதிர்த்து போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ தோல்வி அடைந்தார். இதில் வடகிழக்கு மட்டுமல்லாமல் மலையக மக்களில் பெரும்பாலானவர்கள் தமது வாக்குகளை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கினர். இருந்த பொழுதிலும் அவர் தோல்வியையே சந்தித்தார். கோட்டபாய அவர்கள் ஜனாதிபதியானவுடன் தமிழர்களுக்கெதிரான இராணுவ அடக்குமுறைகள் மெல்ல ஆரம்பிக்கப்பட்டு இராணுவ பிரசன்னம் வடகிழக்கு பகுதி எங்கும் அதிகரித்தது.

இந்நிலையில் அடுத்து பாராளுமன்ற தேர்தல் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இதில் பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ச அவர்கள் களமிறக்கப்பட்டார். ஐக்கிய மக்கள் சக்தி என்னும் கூட்டு கட்சி ஒன்றை உருவாக்கி சஜித் பிரேமதாச அவர்கள் போட்டியிட்டார். இதிலும் பொதுஜன பெரமுன கட்சி அமோக வெற்றியீட்டி 2/3 பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்தது. பிரதமாக மகிந்த ராஜபக்ச அவர்கள் தெரிவானார். அதனை தொடர்ந்து ரணில் - மைத்திரி அவர்களால் கொண்டு வரப்பட்ட 19 ஆம் திருத்தச்சட்டம் நீக்கப்பட்டு 20 ஆம் திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டு பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இந்த 20 ஆம் திருத்தச்சட்டம் மூலம் ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் அதிகமாக்கப்பட்டது. அத்துடன் அதனை தொடர்ந்துவந்த பாதீடும் வெற்றிகரமாக பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. இப்பொழுது அடுத்த ஆட்டம் அரசால் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. அது தான் மாகாணசபை தேர்தல். இத்தேர்தலை வைப்பதற்கு ஆளும் பொதுஜன பெரமுன கட்சியில் சிலரும் மற்றும் பௌத்த இனவாத கட்சி தலைமைகளும் எதிர்த்து வருகின்றனர். மாகாணசபை தேர்தலை வைக்க தேவையில்லை இருக்கிறபடி ஆட்சி நடக்கட்டும் என்ற வகையில் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இன்னுமொரு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தேர்தல் வைக்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கின்றனர். அத்துடன் எதிர் கட்சியினரும் தேர்தலை உடனடியாக வைக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர். இதன்படி தேர்தல் இடம்பெறுமா?, இடம்பெறாதா? என்ற கேள்விக்கு அப்பால் வட கிழக்கில் தேர்தல் இடம்பெற்றால் அதனை எவ்வாறு அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்கொள்ள போகின்றன என்பது தான் இங்குள்ள முக்கியமான விடயம்.

முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பு இக்கட்சிகளின் வட மாகாண நிலவரம் எவ்வாறு உள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாகாணசபை தேர்தலில் அமோக வெற்றியீட்டிய கூட்டமைப்பானது இத்தேர்தலில் அவ்வாறானதொரு வெற்றியை பெறுவது இயலாத விடயம். ஏனெனில் அண்மைக்கால பாராளுமன்ற தேர்தலில் அவர்களால் 10 ஆசனங்களையே பெற முடிந்தது. கடந்த 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாகாணசபை தேர்தலில் வெற்றி பெற்று5வருடங்கள்மாகாணசபையால் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்கவில்லை. ஊழல்கள், மோசடிகள் இடம் பெற்றதாக கூறி 5 வருடங்கள் கடந்து சென்றன. இது வடபகுதி மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் வரும் தேர்தலில் இதற்கான எதிர்வினையொன்று கட்டாயம் ஏற்படும். அடுத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் தமிழ் மக்கள் விடுதலை முன்னணி கட்சி கடந்த பாராளுமன்ற தேர்தலில் 2 ஆசனங்களை பெற்று வெற்றியீட்டி கூட்டமைப்பின் ஆசனங்களை உடைத்ததில் கணிசமான பங்கு வகித்தது. அவர்கள் இம்முறை மாகாணசபை தேர்தலில் களமிறங்கினால் வெற்றி பெறுவார்கள் என்று கூற முடியாது. ஏனெனில் அவர்களின் கட்சிக்குள்ளும் முரண்பாடுகள், உடைவுகள் ஏற்பட்டுள்ளன.


அடுத்து சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பு கட்சிக்குள்ளும் பிரச்சினைகளும் மற்றும் கருத்து முரண்பாடுகளும் காணப்படுகின்றன. கூட்டமைப்பு அங்கத்தவரை குற்றம் சாட்டியே 5 வருடங்களை வெற்றிகரமாக கழித்துவிட்டார் விக்னேஸ்வரன். இவ்வாறு தமிழர் தரப்பு காணப்படுகின்றது.

||ஆம் பக்கம் பார்க்க...

தாயகத்தான்



# பிராந்தியச் செய்திகள்



## இரண்டுவார காலப் பகுதிக்குள் கொரோனா தடுப்பூசி!

கொரோனா தடுப்பூசி எதிர்வரும் இரண்டுவார காலப் பகுதிக்குள் நாட்டிற்கு கிடைக்கப்பெறும்என எதிர்ப்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். இதன்படி அஸ்ட்ராஜெனெகா மற்றும் பைசர் பயோஎன்டெக் ஆகிய தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




இந்த விடயம் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு உட்பட வெளிநாட்டு அரசாங்கத்தின் பலருடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற ஒஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் அஸ்ட்ராஜெனெகா கொரேனா தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கொவிட்-19 அபாய வலயங்களிலிருந்து வருவோரை வடக்கில் தனிமைப்படுத்தல் இடைநிறுத்தம் : ஆ.கேதீஸ்வரன்

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைவாக மேல் மாகாணம் உள்ளிட்ட கொரோனா வைரஸ் தொற்று அபாய வலயங்களிலிருந்து வருகை தருவோரை சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கை வடக்கு மாகாணத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். மேல் மாகாணம் மற்றும் அம்பாறையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து வடக்கு மாகாணத்துக்கு வருகை தருவோரை 14 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்தி பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை சுகாதாரத் துறையினரால் முன்னெடுக்கப்பட்டு வந்தது.



இந்த நிலையில் அதனை இடைநிறுத்துமாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால், சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டது. இது தொடர்பில் வைத்தியக்கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவிக்கையில், "கொரோனாவைரஸ் பரவல் அதிக அபாயம் உள்ளது என தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து வருவோவாரை 14 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கை அவசியமில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளரால் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அவசர அவசியம் ஏற்பட்டால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விண்ணப்பித்து அவரது அனுமதியுடனேயே அபாய வலயங்களிலிருந்து அபாயம் குறைந்த வலயங்களுக்கு வரும் நபர்களைச் சுயதனிமைப்படுத்த முடியும்" என்றார்.

## திங்கட்கிழமை முதல் வடக்கில் திருமண மண்டபங்கள், பொது சந்தைகள் திறப்பதற்கு அனுமதி!!

பொதுச் சந்தைகளை எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து வடக்கு மாகாணத்தில் உள்ள திருமண மண்டபங்கள் மற்றும் பொதுச் சந்தைகளைதிறப்பதற்கு அனுமதி அளிக்கப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த மாதம் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட கொரோனா வைரஸ்பரம்பல் காரணமாக பொதுச் சந்தைகள் மற்றும் திருமண மண்டபங்கள் அனைத்தும் சுகாதார பிரிவினரால்மூடப்பட்டிருந்த நிலையில் அன்று(2021.01.15) காலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற கொரோனா தடுப்பு வழிகாட்டல் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் உள்ள திருமண மண்டபங்களில் 150 பேருடன் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி திருமண நிகழ்வுகளை நடத்த அனுமதி அளிப்பதாகவும் அத்துடன் பொதுச்சந்தைகளையும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி திறப்பதற்கு அனுமதி அளிப்பதாகவும் குறித்த விடயம் தொடர்பான அறிவுறுத்தல்கள் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாகாண பிரதம செயலாளர் அரச அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய மேலும் 35பேர் கைது

கடந்த 24 மணி நேரத்தில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறுவோர் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.





இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டிலேயே கடந்த 24 மணி நேரத்தில் குறித்த 35 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தவகையில் கடந்தஒக்டோபர்30ஆம்திகதியிலிருந்து இதுவரை முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 549 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்றாத 213 நிறுவனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்ட சட்ட விதிகளைப் பின்பற்றத் தவறிய 213 அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டன. எனவே இந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 51 ஆயிரத்தை தாண்டியது

நாட்டில் மேலும் 695 பேர் கொரோனா தொற்றாளர்களாக நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அர சாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதில் 683 திவுலபிட்டிய - பேலியகொட கொரோனா கொத் தணியில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், திவுலபிட்டிய - பேலியகொட கொத்தணி யில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 47ஆயிரத்து 810 ஆக உயர்ந்துள்ளது. வெளிநாட்டிலிருந்து வருகை தந்த 12 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.




அதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 51 ஆயிரத்து 594ஆக உயர்ந்துள்ளது. தற்போது வைத்தியசாலைகளில் மற்றும் சிகிச்சை மைய ங்களில் 7080 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா தொற்றால் குணமடைந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 44 ஆயிரத்து 259 ஆக அதிகரித் துள்ளது. இதேவேளை, கொரோனா சந்தேகத்தில் 741 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந் தவர்களின் மொத்த எண்ணிக்கை 255 ஆக அதிகரித் துள்ளது

## வவுனியாவில் மேலும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி : 174 ஆக அதிகரிப்பு

வவுனியா நகரில் முன்னேடுக்கப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனையில் மேலும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 174 ஆக அதிகரித்துள்ளது. வவுனியா பட்டாணிசூர் பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியா நகரவியாபாரநிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களிற்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.



அதன் ஒரு பகுதி முடிவுகள் இன்று (16.01) காலை வெளியாகிய நிலையில் வவுனியா நகர வியாபார நிலையத்தில் பணிபுரியும் ஒருவருக்கு குருமன்காடு பகுதி வியாபார நிலையத்தில் பணிபுரியும் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வவுனியாவில் கடந்த 10 நாட்களில் மாத்திரம் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 174 ஆக அதிகரித்துள்ளது.




## மீண்டும் இணையும் மாஸ்டர் கூட்டணி?

மாஸ்டர் படத்தில் இணைந்து பணியாற்றிய விஜய் - லோகேஷ் கனகராஜ் கூட்டணி, மீண்டும் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள படம் மாஸ்டர். கடந்த சில தினங்களுக்கு முன் ரிலீசான இப்படம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இதையடுத்து விஜய் நடிக்க உள்ள 'தளபதி 65' படத்தை நெல்சன் இயக்க உள்ளார். அனிருத் இசையமைக்க உள்ள இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது. இப்படத்தை இந்தாண்டு தீபாவளி பண்டிகையை ஒட்டி ரிலீஸ் செய்ய உள்ளனர்.

இந்நிலையில், விஜய்யின் 66-வது படத்தை மாஸ்டர் பட இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்க உள்ளதாக கூறப்படுகிறது. மேலும் இப்படத்தை மாஸ்டர் படத்தின் இணை தயாரிப்பாளர் லலீத் தயாரிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. லோகேஷ் கனகராஜ் உடன் நடிகர் விஜய் மீண்டும் கூட்டணி அமைக்க இருப்பது அவரது ரசிகர்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




## ஈஸ்வரன் படத்தின் முதல் நாள் வசூல் இதோ!

சுசீந்திரன் இயக்கத்தில் சிம்பு நடிப்பில் கடந்த ஜனவரி 14 ம் திகதி ஈஸ்வரன் படம் வெளியானது. ஏற்கனவே சில சர்ச்சைகளிலும் சிக்கிய இப்படம் அதையெல்லாம் கடந்து விஜய்யின் மாஸ்டர் படம் வெளியாகி இருக்கும் சூழ்நிலையில் ஈஸ்வரன் போட்டி படமாகவே பார்க்கப்பட்டு வருகிறது.

வழக்கம் போல சிம்பு ரசிகர்கள் இப்படத்திற்கும் நல்ல வரவேற்பளித்தனர். இந்நிலையிலும் ஈஸ்வரன் படத்திற்கு கலவையான விமர்சனங்கள் மட்டுமே கிடைத்துள்ள நிலையில் முதல் நாளில் சென்னையில் ரூ 20 லட்சம் வசூலித்துள்ளதாம்.



## மாஸ்டர் படத்தின் முதல் நாள் வசூல் தெரியுமா?




லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய், விஜய் சேதுபதி நடிப்பில் வெளியாகி இருக்கும் மாஸ்டர் படத்தின் முதல் நாள் வசூல் பற்றி தகவல் வெளியாகியுள்ளது.

நடிகர்கள் விஜய் மற்றும் விஜய் சேதுபதி நடிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கியிருக்கும் படம் 'மாஸ்டர்'. இந்தப் படம் பொங்கல் தினத்தை முன்னிட்டு இன்று வெளியாகியுள்ளது.

திரையரங்குகளில் 50% இருக்கைகளுக்கு தமிழக அரசு அனுமதி அளித்த போதிலும் மாஸ்டர் படத்தை ரசிகர்கள் விழா போன்று கொண்டாடினார்கள். படத்தை பார்த்த பலரும் பொங்கலுக்கு மாஸ்டர் திரைப்படம் சரியான விருந்தாக அமைந்திருக்கிறது என்று தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மாஸ்டர் படத்தின் முதல் நாள் வசூல் பற்றி தகவல் வெளியாகியுள்ளது. சென்னையில் மட்டும் முதல் நாளில் ரூ.1.21 கோடி வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

## முதல் முறையாக தனது காதலனை அறிமுகம் செய்த பிக் பாஸ் நடிகை ஓவியா



களவாணி படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் கதாநாயகியாக ரசிகர்கள் மனதில் பிரபலமாக துவங்கியவர் நடிகை ஓவியா.

இதன் பின் சில திரைப்படங்கள் நடித்திருந்தாலும், விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பிக்பாஸ் மூலம் தான் ரசிகர்கள் மத்தியில் உச்ச நட்சத்திரமாக பிரபலமானார்.

பிக்பாஸ் வீட்டிற்குள் கூட நடிகர் ஆரவுடன் காதல் ஏற்பட்டு, மருத்துவ முத்தம் எனும் சர்ச்சையில் சிக்கினார்.

இந்நிலையில் தனது டுவிட்டர் பக்கத்தில் முதன் முறையாக தனது காதலனை புகைப்படத்துடன் அறிமுகம் செய்து வைத்துள்ளார் நடிகை ஓவியா.

இந்த புகைப்படத்தில் நடிகை ஓவியா.
ஆண் ஒருவருக்கு முத்தம் கொடுக்கிறார். மேலும் அந்த பதிவில் 'காதல்' என்று பதிவிட்டுள்ளார் நடிகை ஓவியா.

## நடிகை ராய் லட்சுமிக்கு கொரோனா!



தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என பல்வேறு மொழி படங்களில் நடித்து பிரபலமான நடிகை ராய் லட்சுமிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் கடந்த ஒரு வாரமாக அவர் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளாராம். தற்போது அவரது உடல்நிலை சீராக உள்ளதாகவும் இன்னும் சில தினங்களில் பூரண குணமடைந்து விடுவார் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில் ராய் லட்சுமி தனது இன்ஸ்டாகிராம் பதிவில், " காலம் மாறிவிட்டது. நாம் அனைவரும் பாசிடிவ்-க்கு பதிலாக நெகட்டிவ் முடிவுகளை தான் எதிர்பார்க்கிறோம்' என குறிப்பிட்டுள்ளார்.




# உடல் அழகு பெற தேவையான அழகு குறிப்புகள்..!

**முக அழகு குறிப்பு :–**

முகம் அழகு பெற தினமும் பப்பாளிப் பழத்தை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து முகத்தை குளிர்ந்த நீரால் கழுவ, முகம் பொலிவுடனும், பளப்பளப்பாகவும் இருக்கும். முழு உடல் அழகு பெற முட்டைக்கோஸ் சாறை முகத்தில் தடவி வர முகச் சுருருக்கம் மறையும். இரவில் படுக்கப் போகும் முன் தேன், குங்குமப்பூ, மஞ்சள் சேர்த்து அரைத்து சாப்பிட்டு வந்தால் உடல் மினுமினுப்பாகும். மேலும் முழு உடல் அழகு பெறும்.

**கழுத்தை பராமரிக்க:–**

கழுத்தை பராமரிக்க சிறிதளவு ரோஸ் வாட்டர், சிறிதளவு வெங்காய சாறு இரண்டு சொட்டு ஆலிவு ஆயில் மற்றும் பயத்த மாவு ஆகியவற்றை கலந்து கழுத்தில் தடவி ஒரு பத்து நிமிடம் கழுத்திலிருந்து தாடையை நோக்கி லேசாக மசாஜ் செய்துவிடுங்கள். இவ்வாறு தொடர்ந்து செய்ய நாளடைவில் உங்கள் கழுத்து பகுதியில் இருக்கும் கருப்பு நிறம் மாறி பளப்பளப்பாக காணப்படும்.

**கண்களில் கருவளையம் நீங்க:–**

கண்களில் இருக்கும் கருவளையம் நீங்க இது தான் சிறந்த வழி. வெள்ளரிக்காய் விதையை காயவைத்து பொடி செய்து அதில் தயிர் சேர்த்து பசைபோல் ஆக்கவும். இந்த பேஸ்டை முகத்தில் தொடர்ந்து போட்டு வர முப்பது நாட்களில் கண்களில் இருக்கும் கருவளையம் மறைந்து காணப்படும்.

**கருப்பு திட்டுகளை நீக்க:–**

சிலருக்கு முகத்தில், மூக்கில், கண்ணங்கள் என அசிங்கமாக கருப்பு நிற திட்டுகள் காணப்படும். இதை கிராம புறத்தில் 'மங்கு' என குறிப்பிடுவார்கள். இவற்றைப் போக்க, ஜாதிக்காய், சந்தனம், வேப்பங்கொழுந்து ஆகியவற்றை நீர் கலந்து நன்றாக அரைத்துக்கொள்ளுங்கள். அரைத்த பற்றை முகத்தில் இருக்கும் கருப்பு திட்டுகள் இருக்கும் இடத்தில் பசைப்போல தடவுங்கள். சில முறை இந்த முறையை நீங்கள் கையாண்டால் போதும் முகத்தில் உள்ள அசிங்கமான மங்கு(கருந்திட்டு)மறைந்துவிடும்.

**இதழ்களை பராமரிக்க:–**

நம் வீட்டில் பொதுவாக சமைப்பதற்கு பீட்ருட் அதிகம் வாங்குவோம். அந்த பீட்ருடை ஒரு துண்டு எடுத்து உங்கள் உதட்டில் லிப்ஸ்டிக் போடுவது போல் போட்டு வந்தாலே போதும். உங்கள் உதடு மிகவும் அழகாக இருக்கும்.



**ஒரு நொடி உன்னை**
**பிரிந்தாலும்**
**மறு நொடி**
**உன்னை சேரும் வரம்**
**வேண்டும்**
**எப்பொழுதும் உன்**
**அருகாமை வேண்டும்**
**ஆயுள் முழுவதும் உன்**
**அன்புக்கு**
**மட்டும் அடிமையாக**
**இருக்க வேண்டும்**
**மீண்டும் ஓர் ஜென்மம் உன் காதல்**
**வேண்டும்**




## மொறு மொறு சுவையில் உருளைக்கிழங்கு சிப்ஸ்..!

வீட்டில் இருக்கும்போது ஏதாவது கொறிக்க வேண்டும் என வாய் தேடும்.. அப்படி தேடும்போது வீட்டில் உருளைக்கிழங்கு இருந்தால், சிப்ஸ் செய்து சாப்பிடுங்க..



**தேவையான பொருட்கள்:-**

**உருளைக்கிழங்கு - 5**
**உப்பு - 1 ஸ்பூன்**
**மிளகாய் தூள் - 1 ஸ்பூன்**
**எண்ணெய் - பொறிக்க**

**செய்முறை:-**

உருளைக் கிழங்குகளை தோல் சீவிக்கொள்ளுங்கள். பின் உருளைக்கிழங்களை சீவ சீவல் கருவி பயன்படுத்தி மெல்லியதாக சீவிக்கொள்ளுங்கள்.

அடுத்ததாக அதை தண்ணீரில் இரண்டு முறை அலசுங்கள்.

பின் காற்றோட்டமாக துணி விரித்து உருளைக்கிழங்குகளை ஒட்டாமல் காய வைய்யுங்கள். ஈரம் போனதும் எடுத்துக்கொள்ளுங்கள்.

அடுத்ததாக உப்பு ஒரு ஸ்பூன் மற்றும் தண்ணீர் கொஞ்சம் சேர்த்து கரைத்துக்கொள்ளுங்கள்.

கடாயில் எண்ணெய் விட்டு எண்ணெய் நன்குக் காய வேண்டும். காய்ந்ததும் சீவி வைத்துள்ள உருளைக்கிழங்குகளை போடுங்கள்.

அடுத்ததாக கலக்கி வைத்துள்ள உப்பு தண்ணீர் கொஞ்சம் எண்ணெய்யிலேயே சுற்றி ஊற்றுங்கள். எண்ணெய் தெரிக்காதவாறு தள்ளி நின்று ஊற்றுங்கள். இது சிப்ஸில் உப்பு ஏறவே இந்த ஸ்டெப்

அடுத்ததாக சீவல் நன்கு மொறு மொறுவென வரும் வரை பொறித்துகொண்டே இருங்கள். க்ரிஸ்பியாக வந்ததும் எடுத்துவிடுங்கள்.

இப்படி எல்லாவற்றையும் செய்ததும் பெரிய பவுலில் போட்டு மிளகாய் தூள் தூவி குலுக்குங்கள். தேவைப்பட்டால் பெருங்காயத்தூளும் போடலாம்.

அவ்வளவுதான் மொறு மொறு உருளைக்கிழங்கு சிப்ஸ் தயார்.

தொகுப்பு :- சப்தஹி

07ஆம் பக்க தொடர்ச்சி...

மறுபக்கம் அரச தரப்பின் நிலையானது அரசுடன் இணைந்து செயல்படும் அங்கஜன், டக்ளஸ் தேவானந்தா, மஸ்தான் போன்றவர்களின் துணையுடன் இம் மாகாணசபை தேர்தலை வெற்றி பெற முயலும் முன்னெடுப்பு காணப்படுகின்றது. அதற்கான முன்னோட்டமாக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகள் மற்றும் கடல் சார் பிரச்சினைகளை கேட்டறிந்துஅவர்மூலமாகஒருதீர்வை வழங்கி தமிழ் மக்களின் வாக்குகளை கையகப்படுத்தும் திட்டத்தில் செயற்படத் தொடங்கியுள்ளதாக தெரிகின்றது. அத்துடன் கடந்த பாராளுமன்ற தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு மிகப்பெரும் வெற்றியீட்டிய அங்கஜன் இராமநாதன் அவர்களை வைத்து தனது மாகாணசபைக்கான வெற்றி காய் நகர்த்தலை ஆரம்பித்துள்ளது. அண்மைக்கால அபிவிருத்தி செயற்பாடுகள், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் என அங்கஜன் ஊடாக வழங்கி தமிழ் மக்களின் வாக்குகளை பெற முயற்சிக்கின்றது. அத்துடன் முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெற மஸ்தான் அவர்களையும் களமிறக்கியுள்ளது. இந்த விடயத்தில் சற்று சறுக்கல் நிலை காணப்படும் காரணம் முஸ்லிம் மக்களின் ஜனாசா எரிப்பு விவகாரம் முஸ்லிம் மக்களை அதிருப்தி கொள்ள வைத்துள்ளது.

இந்நிலையில் இது சம்பந்தமாக அரசுக்கு எதுவித அழுத்தமும் கொடுக்காமல் மௌனம் காத்து வரும் முஸ்லிம் தலைமைகளில் மஸ்தானும் ஒருவர். ஆகவே இம்முறை மஸ்தானுக்கான ஆதரவு பெருமளவு குறையும் என எண்ணலாம். ஆனால் முஸ்லிம்மக்களின் உறுதித்தன்மையை சரியாக அனுமானிக்க முடியாது. தேர்தல் ஒன்று வந்துவிட்டால் தமது மத உரிமை கொள்கையை விட்டு தமது எதிர்கால வாழ்வு முறை, பொருளாதார முறையை பற்றி சிந்தித்து அதற்குத் தான் முடிவெடுப்பார்கள்.

ஆகவே முஸ்லிம் மக்களின் தீர்ப்பானது தேர்தலின் முடிவுகள் வெளிவந்த பின்னர் தான் தெரியவரும். இவ்வாறு அரசானது மூன்று பக்கமாக தமிழர் தரப்பில் இருந்து வாக்குகளை அள்ள தனது இராஜதந்திர நகர்வை ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இத் தேர்தலில்வெற்றிபெறவேண்டுமாயின் தமிழ் மக்கள் சலுகைக்கோ, அபிவிருத்திக்கோ மயங்கி செல்லாமல் தமது தேசிய ரீதியான பிரச்சினைக்கு முடிவெடுக்கக்கூடிய வகையில் தமது செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு ஒரே வழி மூன்று கட்சிகளாக பிரிந்து செயற்படாமல் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து மூன்று கட்சிகளும் இணைந்து ஓர் பொது முதல்வர்வேட்பாளரைநிறுத்தி அதனூடாக தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று வெற்றிபெற முடிவதோடு அரசின் புலனாய்வு சூழ்ச்சிகளை வென்று மாகாண சபையை அமைக்கலாம். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குறிப்பாக தமிழரசுக் கட்சி பல விட்டுக்கொடுப்புகளை புரிய வேண்டும்.

கட்சிகள் அனைத்தும் தமிழ் மக்களின் எதிர்கால நன்மை கருதி தமது சுயநல அரசியலை தூக்கியெறிந்து விட்டு ஓர் இலக்குடன் பயணிக்கவேண்டிய தேவையான காலத்தில் தமிழினம் வந்து நிற்கின்றது. இத்தேர்தலில் தமிழர்களின் பலம் அற்று போகுமாய் இருந்தால் தென்பகுதியில் சிங்கள மக்களின் தனி வாக்குகளால் வெற்றி பெற்று சரித்திரத்தை மாற்றியது போல எதிர்காலத்தில் வடகிழக்கு தமிழர்களின் வாக்குகளாலும் அவர்கள் வெற்றி பெறுவது தவிர்க்க முடியாமல் போய்விடும். வடகிழக்கு தமிழர்கள் தமது இலட்சியத்தையும் தமது உறுதியையும் தமது கொள்கையையும் விட்டு விலகக்கூடியவர் அல்ல. ஆனால் அரசு தனது இராணுவ புலனாய்வு மற்றும் சலுகை அரசியல், வேலை வாய்ப்பு அரசியல், அபிவிருத்தி அரசியல் என எல்லாவற்றையும் வழங்கி தமிழ் மக்களை இக்கட்டான நிலைக்கு கொண்டு வந்து வெற்றி பெற முயற்சிக்கும்.

ஆகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் இதனை முறியடித்து வெற்றிபெறுவதே அவர்கள் முன் இருக்கும் பாரிய பொறுப்பாகும். இந்நிலையில் கிழக்கு மாகாண நிலையானது. தமிழர் தரப்புக்கு மிகவும் மோசமானதொரு நிலை காணப்படுகின்றது. அங்கு அரசின் பலம் அதிகரித்து காணப்படுகின்றது. முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் அவர்கள் கொலை குற்றச்சாட்டில் கடந்த 7 வருடங்களாக சிறையில் இருந்த நிலையில் அண்மையில் பிணை வழங்கப்பட்டு விடுதலையானார். இது அரசின் மாகாணசபை தேர்தலுக்கான ஓர் வியூகமாக காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் பிள்ளையான் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் மக்களுக்கான அபிவிருத்திகள் பல செய்யப்பட்டன. அதற்கு பரிசாக தான் கடந்த பாராளுமன்ற தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் அதிகூடிய வாக்குகளை பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.

ஆகவே அவரை வைத்து கிழக்கு மாகாண மக்களின் வாக்குகளை பெற அரசு முயற்சிக்கும் அத்துடன் கருணா அவர்களும் அங்கு செல்வாக்கு செலுத்திவரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகி அரசுடன் இயங்கிவரும் வியாழேந்திரன் அவர்கள் கடந்த பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று இராஜாங்க அமைச்சராக உள்ளார். இவரும் கிழக்கு மாகாணத்தில் மாகாணசபை தேர்தலில் அரசுக்கு உறுதுணையாக இருப்பார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் அங்கு தனித்துத்தான் இவர்களுடன் போராட வேண்டி இருக்கும்.

ஏனெனில் அங்கு தமிழ் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பு கட்சிகளுக்கு பெரிதளவில் மக்கள் ஆதரவு இல்லை. கூட்டமைப்பு தான் அங்கு போட்டியிட்டு தமது பலத்தை நிரூபிக்க வேண்டும். தற்பொழுது கூட்டமைப்பு சார்பில் சாணக்கியன், ஜனார்தனன், இரா. சம்பந்தன் அவர்கள் மட்டுமே கடந்த பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றனர். அத்துடன் கிடைத்த போனஸ் ஆசனம் ஊடாக கிழக்கு மாகாணத்தில் கலையரசனுக்கு வழங்கப்பட்டு அவர் தற்பொழுது பாராளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

இந்நிலையில் கூட்டமைப்பு எவ்வாறு தமது வியூகத்தை கிழக்கு மாகாணத்தில் அமைக்கப் போகின்றது என்பதே இங்குள்ள கேள்வியாக உள்ளது. தமிழ் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பு கட்சிகள் வட மாகாணத்தில் தான் தமது முழு செயற்பாட்டையும் முன்னெடுத்து வருகின்றனர். அவர்களின் கிழக்கு மாகாணச் செயற்பாடானது மந்தகதியிலே உள்ளது. இந்நிலையில் வடக்கை போன்று கிழக்கிலும் ஒருமித்து ஓரணியில் நின்று முதல்வர் வேட்பாளரை நிறுத்தி கிழக்கு மாகாணத்தில் தமது நிலையைப் பலப்படுத்த முயல வேண்டும் என்பதே காலத்தின் தேவையாகும்.

இதை உணர்ந்து வடகிழக்கு மாகாணசபை தேர்தலை வெற்றிபெற அனைத்து கட்சிகளும் மக்களின் உணர்வை புரிந்து மக்களின் எதிர்கால அரசியல் அபிலாசைகளை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்ய வட கிழக்கு மாகாணசபையை பயன்படுத்த வேண்டும் என அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளையும் தமிழினம் வேண்டி நிற்கின்றது.

# தோல்வியை கண்டு துவளாதீர்...

வாழ்க்கையில் உயர்வும், தாழ்வும் மாறி மாறி வருவது சகஜம். வாழ்வில் எல்லோரும் முன்னேற வேண்டும் என்று ஆசைப்படுவது இயல்பு. உயர்வு வரும் இடத்தில் தோல்விகளும் கூடவே வரும்.

உயர்வும் தாழ்வும் நாணயத்தின் இரு பக்கங்களாக கருத வேண்டும். தோல்வியை கண்டு துவளக் கூடாது. வாழ்வில் ஒரு முறையேனும் தோல்வி ஏற்பட்டால் தான் வெற்றியின் அருமை புரியும். சாதாரணமாக ஒருவன் வெற்றியடைந்தால் அவனுக்கு அது பெரிய விஷயமாக தெரியாது. பல முறை தோல்வி கண்டு, வெற்றியை தழுவும் ஒருவனால் தான் அதை உண்மையில் உணர முடியும். அவன் சந்தோஷத்திற்கு அளவே இருக்காது. வெற்றியை கொண்டாடுவான்.



நமக்கு ஏற்பட்ட நிறைய தோல்விகளும் நம் வெற்றிக்கு காரணமாக அமையும். ஒருவர் பெற்ற வெற்றியை தாங்க முடியாதவர்கள், அவரை ஏதேனும் வகையில் தோற்கடிக்க வேண்டும் என்று நினைப்பார்கள்.

நாம் வெற்றி பெற்றுக் கொண்டே போகும் போது மற்றவர்களை பற்றி அறிய முடியாது. ஆனால், தோல்வி ஏற்படும் போது தான், யார் நல்லவர் கெட்டவர் என்ற சுயரூபம் நமக்கு தெரியும். பொதுவாக வெற்றி பெறும் போது நமது நண்பர்கள் கூட எதிரிகளாக மாறுவார்கள். ஆனால், தோல்வி அடையும் போது சில நண்பர்களும் நமக்குக் கிடைப்பார்கள்.

இதெல்லாம் வாழ்க்கையில் சகஜமாக எடுத்துக் கொண்டு எல்லோரிடமும் நட்புடன் பழக வேண்டும். சில தோல்விகள் தான் வேகமாக வளர வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். தோல்வி வரும் போது அதற்காக துவண்டு போய் சாப்பிடாமல், இரவு முழுவதும் தூங்காமல் கண் விழித்து யோசிப்பதை விட்டுவிட்டு, இதுவும் வெற்றிக்கான பாடமாக எடுத்துக் கொண்டு நேர்மறையாக நமது எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

**தோல்வியின் முடிவே உயர்வின் ஆரம்பமாக இருக்கும்**

# வாழ்க்கை தத்துவங்கள்

புரியாத வார்த்தை இருந்தும் பயன் இல்லை! புரியாத வாழ்க்கை வாழ்ந்தும் பயன் இல்லை....

அழுது நீ கோழையாகாதே! உனக்கு நண்பன் நீயே! உன்னை காப்பற்ற வருபவர் எவர் உளர்? நீயே உன் காவலன்....ஆதலினால் யாரையும் எதற்கும் எதிர்பார்க்காதே!

உனது வாழ்க்கைக்கு எல்லை அமைத்து வாழ்! ஆனால் எல்லைக்குள் ஒரு போதும் வாழ்க்கையை அமைத்து விடாதே....!

இதுவரை ஆராய்ச்சிக்கு உட்ப்படுத்தாத ஒன்று எது தெரியுமா அன்பு. காரணம் அன்பென்றால் அகிலமும் அடங்கிவிடும் என்பதனால்.

ஒருவனின் வார்த்தை தரும் வலியை விட அவன் செய்யும் செயலின் வலி அதிகம்.

அன்பானவர்களிடம் உன் மனதை மறைத்து விடாதே. உன் மனதில் உள்ளதை மறைப்பதாயின் அன்பாய் இருப்பது போல் நடித்து வாழாதே.

கற்பனையில் சித்திரத்தை வரைந்து விடலாம், ஆனால் ஒருவனின் மனதை புரிந்து கொள்ளாமல் நண்பன் ஆகி விட முடியாது.

ஒரு மனிதனின் அதீத அன்பானது தாயிடம் மட்டுமே உள்ளது..

ஒன்றை நாம் பார்க்கும் விதத்தில் அது சரி தப்பு என்று முடிவு எடுத்து விடுகிறோம். அதை நாம் எப்போது சரியா தவறா என்று ஆராய்ந்து பார்ப்பதில்லை அப்படி நாம் ஆராய்ந்து பார்த்து விட்டால் சந்தேகங்கள் மனிதர் இடையே தோன்றாது.

ஆயிரம் தடவை உன் சந்தேகத்தை நேரே கேள் அது சிறிய கோபத்தை உருவாக்கும் ஆனால் பதில் கிடைத்து விடும், ஆனால் உன் சந்தேகத்தை நேரே கேட்க்காமல் உன்னுள் வைத்து மறை முகமாய் ஒருவனைக் காயப்படுத்தாதே அது உனக்கு எல்லையற்ற துன்பத்தை தந்துவிடும்...

இழப்பு அல்லது பிரிவின்றி எவரும் ஒன்றின் அருமையை உணருவதில்லை.

நான் என்று சொல்லும் போது எனது அகத்தில் இருப்பதையே கூறுகிறோம், எனது என்று சொல்லும் போது எனக்காக புறத்தில் இருப்பதை கூறுகிறோம். இதை எல்லாம் தாண்டி நாம் என்று கூறும் பொழுதே வெளியில் எமக்காக காத்திருக்கும் வாழ்க்கையைப் பெற்றுக் கொள்கிறோம்.

மனிதனாய் பிறந்து மிருகத்தின் குணத்தைக் கொண்டிருப்பதை விட, மிருகமாய் பிறந்து அது தன் இனத்தின் மீது காட்டும் அன்பு போல் காட்டி வாழ்ந்து விடு மனிதா!

# முஸ்லீம்களின் ஜனாசா எரிப்பு விவகாரத்தில் வெள்ளைக்கொடி பிடிக்கும் சாணக்கியன்

## கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்



**கடந்தவார தொடர்ச்சி...**

அபிருத்தி என்று கூறுவது இரண்டு ஆட்டுக்குட்டிகளைக் கொடுப்பதோ அல்லது கோழிக்குஞ்சுகளைக் கொடுப்பதோ அல்ல. அதிலும் அரசுடன் இணைந்திருக்கும் ஒரு அமைச்சரோ, பாராளுமன்ற உறுப்பினரோ செய்யும் அபிவிருத்தி இவற்றை வழங்குவது அல்ல. மலையகத்தில் சில இடங்களில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு அதாவது ஜனாதிபதி அவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்குள் வாழும் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க முன்வந்துள்ளார். முழுமையாக இவ்வாறான குடும்பங்களுக்கே இந்த வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் இன்று பார்த்தால் வட்டிக்கு பணம் கொடுப்பவர் இந்த நேர்முகப் பரீட்சைக்கு வருகிறார். விலையுயர்ந்த மோட்டார் சைக்கிளில் வருகிறார்கள். உண்மையில் கஸ்டப்பட்டவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்காமல் தங்களுக்கு பின்னால் கறுப்பு ஆடைகளுடன் வலம்வந்தவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுவது அபிவிருத்தி அல்ல. தற்போது வீட்டுத்திட்டங்கள் வந்திருக்கின்றன. இவை கூட வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு உரிய முறையில் வழங்கப்படுவதில்லை. இவை எல்லாம் அபிவிருத்திகள் அல்ல. உதாரணமாக அபிவிருத்தி என்பது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு துறைமுகத்தை அமைத்து அதன் ஊடாக 400 படகுகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுதல் ஒரு முழுமையான அபிவிருத்தி. அல்லது தொழிற்பேட்டைகளை அமைத்து வேலை வாய்ப்புக்களை வழங்குதல் ஓர் முழுமையான அபிவிருத்தி. இவற்றைவிட்டுவிட்டு ஒரு அமைச்சர் இரண்டு ஆட்டுக்குட்டிகளையும் கோழிக் குஞ்சுகளையும் வழங்குதல் அபிவிருத்தியாகாது. அரசினால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என வழங்கப்படும் வேலைத்திட்டங்களை தாங்கள் தான் கொண்டு வந்தோம் என்று கூறுவதும், அது ஒரு பாராளுமன்ற உறுப்பினரோ அமைச்சரோ இருந்தாலும் இல்லாவிட்டாலும் அரசினால் நடைமுறைப் படுத்தப்படும் வேலைத்திட்டங்கள். அபிவிருத்தி என்கிற போர்வையில் மண் அகழ்வு வேலைகள் இடம்பெறுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த மண் சூறையாடல் இடம்பெறுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கொழும்புக்கு இரயிலின் ஊடாகக் கூட மண் கொண்டுசெல்லப்படுகிறது. மக்கள் இதற்காகவா வாக்களித்தார்கள். இது தொடர்பாக மண் சம்பந்தமான அமைச்சருடன் கதைத்திருக்கிறேன். ஆனால் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் இருப்பதால் சந்தேகம் வருவது இயற்கைதான். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளுநருடனான கூட்டத்தில் ஒரு குழு ஒன்றினை அமைத்து மண் அனுமதிப்பத்திரம் தொடர்பாக ஆராயுமாறு ஆளுநர் கூறினார். ஆனால் அதற்கு பிள்ளையான் அவர்கள் நேரடியாக தான் அதனை அனுமதிக்கமாட்டேன் என்று எனக்குக் கூறினார். ஒரு வேளை அவருக்கு அதில் தொடர்பு இருக்கலாம். இல்லாவிடில் ஒரு குழுவை அமைத்து ஆராயவிடலாம். அந்தக் குழுவை அமைக்க தான் தடையாக இருப்பேன் என பகிரங்கமாகக் கூறினார் ஆளுநர் கூறியதையும் மீறி. இது அபிவிருத்தி அல்ல.

தமிழ்த் தேசியம் என்று நாம் பார்த்தால் மகிலந்தமடு மாதவனை, தொல்பொருள் திணைக்களத்தின் காணி சுவீகரிப்பு இவ்வாறான விடயங்கள் இன அழிப்புக்கான அறிகுறிகளாகத்தான் நான் இதனைப் பார்க்கிறேன். தமிழ்த் தேசிய அரசியலில் இது ஒரு முக்கிய விடயம். இல்லாவிட்டால் ஒரு குறுகிய காலத்திற்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் என்கிற அடையாளம் இல்லாமல் போய் வேறு இனத்திலுள்ளவர்கள் எங்களுடைய மாகாணத்தை ஆளுகின்ற நிலை வரும்.

**கேள்வி : வியாழேந்திரன் அவர்களைப் போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஒரு பதவியை வழங்கிவிட்டால் அரசுடன் இணைந்து விடுவார்கள் என்கிற விம்பம் தோற்றுவிக்கப்படுகிறது. நீங்களும் ஒரு பதவியை வழங்கினால் அரசுடன் இணைந்துகொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறதா?**

**பதில் :-** இப்படியான விமர்சனங்கள் எல்லாம் எனக்கு பதவிகளைத் தரப்போகிறது. நான் எனக்கு அமைச்சுப் பதவி தான் தேவை எனில் வியாழேந்திரனை விட நல்ல ஒரு பதவி எடுத்திருக்கலாம். நான் பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டதற்குக் காரணம் எனது தனிப்பட்ட தேவையை பூர்த்தி செய்வதற்காக அல்ல. நீங்கள் நேரடியாக எனது வீட்டிற்கு வந்து பார்த்தாலே உங்களுக்குத் தெரியும்.

வியாழேந்திரன் கூறும் குற்றச்சாட்டு என்னவென்றால், அவர் வீடு கட்டியதே அரசியலுக்கு வந்த பிறகுதான். நாங்கள் அப்படியான குடும்பத்திலிருந்து வரவில்லை. நிதிக்காக பொருளாதாரத் தேவைக்காக தனிப்பட்ட தேவைக்காக இந்த கட்சியை விட்டுவிட்டு தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டு, துரோகம் செய்து விட்டு போகவேண்டிய அவசியம் எனக்கு இல்லை. என்னுடைய இறுதிவரை தமிழரசுக்கட்சியுடன் தான் என்னுடைய செயற்பாடுகள் இருக்கும்.

**கேள்வி : நீங்கள் பாராளுமன்றிலே முஸ்லீம்களின் ஜனாசா எரிப்பு விவகாரம் தொடர்பில் குரல் கொடுத்திருந்ததுடன், இவ்விடயம் தொடர்பாக முஸ்லீம் அரசியல்வாதிகள் வெட்கித் தலைகுனிய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். அல்பிரட்துரையப்பாதொடக்கம்லக்ஸ்மன் கதிர்காமர் வரை அரசால் அல்லது ஆயுதக்குழுக்களால் 172 புத்திஜீவிகள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தமிழ் மக்களுக்கானத் தீர்வுகள் கிடைக்கப்பெறஉரியஒத்துழைப்புக்களைச் செய்யவில்லை என்கிற காரணத்தினால் தான் கொல்லப்பட்டார்கள். அதுபோல நீங்கள் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற வளர்ந்துவருகின்ற ஒரு அரசியல்வாதியாக பாராளுமன்றிலே செயற்படுகின்ற போது நீங்கள் முஸ்லீம்களுக்கு ஆதரவு வழங்குவது என்பது, வாழைச்சேனை படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, சாய்ந்தமருது படுகொலை, ஏறாவூர் படுகொலை என ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் முஸ்லீம் ஊர்காவற் படையினரால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அம்பாறை மாவட்டத்திலே நாற்பது ஆலயங்களும் 16 கிராமங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளில் முஸ்லீம் ஊர்காவற் படையினரும், முஸ்லீம் சில அரசியல் தலைமைகளும் ஹிஸ்புல்லா உட்பட பலர் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறான வரலாறுகள் தெரிந்து தான் நீங்கள் முஸ்லீம்களுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றீர்களா? அல்லது சகோதரத்துவத்துடன் ஆதரவு தெரிவித்திருக்கின்றீர்களா?**

**பதில் :** உண்மையில் முஸ்லீம்களின் ஜனாசா எரிப்பு என்பதைப் பற்றி நாம் தமிழ், முஸ்லீம், சிங்களம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என்றெல்லாம் பார்க்கக்கூடாது. என்னைப் பொறுத்தவரை ஜனாசா எரிப்பு என்பது ஒரு மனிதனுடைய இறுதி கிரியை. அதை வைத்து நாங்கள் அரசியலுடன் தொடர்பு படுத்தக்கூடாது. நாளைக்கு உங்களுக்கு உங்களது மதத்தின் படி இறுதிக் கிரியைகள் செய்வதற்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டால் உங்களுக்கு எவ்வாறு இருக்கும். இந்த உலகில் வாழ்கின்ற முஸ்லீம்கள் சொர்க்கத்திற்குச் செல்வதாக கூறப்படுகிறது. அது அவர்களுடைய நம்பிக்கை. இதுபற்றி யாரும் கதைப்பது தவறு என்று கூறினால் அது ஒரு மனிதாபிமானமற்ற செயல். ஜனாசாவை எரிப்பது தவறு. அது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல், ஒரு அரசாங்கம் அதனைச் செய்யக்கூடாது என்று நான் ஒரு காலமும் அதனைக் கூறாமல் விடமாட்டேன். அது நிச்சயம். சிங்கள இனத்திற்கு எதிராக, இந்த நாட்டில் இருக்கின்ற இராணுவத்தினர் பெரும்பாலும் சிங்களவர் தான். உதாரணமாக மஹர சிறைச்சாலையில் கலவரத்தின் போது சிங்களவர்கள் 12 பேர் இறந்துபோனார்கள். அதைக்கூட தவறு என்றுதான் நான் கூறினேன். அவர்களுக்கு அநீதி நடக்கிறது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்பதை விட ஒரு மனிதனாக எந்த இடத்தில் எவருக்கெதிராக பிழை நடக்கின்றதோ பிழையை பிழை என்று சொல்வது என்னுடைய கடமை.

ஆனால் அதேநேரம் நீங்கள் சொல்வது போல தமிழ் - முஸ்லீம் உறவுகளுக்கிடையில் பல பிரச்சினைகள் கடந்த காலத்தில் இருந்திருக்கிறது. நீங்கள் குறிப்பிட்டதை விட இன்னும் நிறைய விடயங்கள் இருக்கிறது. இரு சிறுபான்மை இனங்களுக்கிடையிலும் பிரச்சினைகள் இருக்கிறது. முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவர்கள் கூட தமிழினத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன் வைக்கலாம். இந்த இரண்டு வேறுபாடுகளையும் மறந்து நாம் பயணிக்காமல்விட்டால் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை தமிழ் - முஸ்லீம்கள் சமமாக இருக்கிறோம். வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த கிட்டத்தட்ட 95% மானவர்கள் தமிழ் பேசும் மக்களாக இருக்கிறோம்.

இரண்டு இனங்களிலும் பிரச்சினைகளுக்குரிய நபர்கள் இருக்கிறார்கள் நான் இல்லை என்று கூறவில்லை. கல்முனையில் கூட அனுமதி வழங்கப்படாமல் அமைக்கப்பட்டிருக்கும் ஆலயம் ஒன்றினை இடிக்கவேண்டும் என்று ஒரு தனி நபர் கூறியதாக ஒரு பிரச்சினை. அவருடைய அரசியலுக்காக அவர் அதை செய்கிறார். அதேநேரத்தில் சஹ்ரானினுடைய ஒரு குழு தான் அந்த குண்டுவெடிப்புக்குப் பொறுப்பு. அனைத்து முஸ்லீம்களும் இணைந்து அதனைச் செய்ததாக கதைக்கக்கூடாது. கடந்த காலத்தில் நடந்த பிரச்சினைகளைப் பற்றி கதைப்பதாக இருந்தால் நாம் தொடர்ச்சியாக கதைத்துக் கொண்டிருக்கலாம். அதாவது நாம் எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதாக இருந்தால் இனி வருங்காலத்தில், மகிலந்தமடு மாதவனையில் காலி, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கொழும்பு, கம்பஹா, அப்பாறை, மகியங்கனை போன்ற பிரதேசங்களைச்சேர்ந்தவர்களைக் கொணர்ந்து காணிகளைக் கொடுக்கிறார்கள்.

**தொடரும்...**

**நேர்காணல் – இரணியன்**




## புதிய டவுன்லோட்களில் அசத்தும் டெலிகிராம்

டெலிகிராம் குறுந்தகவல் செயலியை பயன்படுத்த 72 மணி நேரத்தில் 2.5 கோடி புது பயனர்கள் இன்ஸ்டோல் செய்துள்ளனர். வட்ஸ்அப் பிரைவசி பாலிசி விவகாரத்தால் சிக்னல் மட்டுமின்றி டெலிகிராம் செயலியை பயன்படுத்துவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. அந்த வகையில் டெலிகிராம் செயலியை 72 மணி நேரத்தில் மட்டும் 2.5 கோடி பேர் இன்ஸ்டோல் செய்துள்ளதாக அந்நிறுவன தலைமை செயல் அதிகாரி பேவல் டுரோவ் தெரிவித்தார்.

தற்சமயம் டெலிகிராம் செயலியின் மாதாந்திர பயனாளிகள் எண்ணிக்கை 50 கோடி என்றும் அவர் தெரிவித்தார். இது உலகளாவிய எண்ணிக்கை ஆகும். இதில் 38 சதவீத பயனர்கள் ஆசியாவில் இருந்தும், 27 சதவீதம் பேர் ஐரோப்பாவிலும், லத்தீன் அமெரிக்காவில் இருந்து 21 சதவீதம் பேர், மத்திய கிழக்கு மற்றும் 8 சதவீதம் பேர் வட ஆப்ரிக்க பயனர்கள் ஆவர்.

2021, ஜனவரி 6 முதல் ஜனவரி 10 ஆம் திகதி வரையிலான காலக்கட்டத்தில் மட்டும் சிக்னல் செயலியை சுமார் 23 லட்சம் இந்தியர்கள் புதிதாக டவுன்லோட் செய்துள்ளதாக ஆய்வு நிறுவனம் தெரிவித்து உள்ளது. இதே காலக்கட்டத்தில் டெலிகிராம் செயலியை 16 லட்சம் பேர் புதிதாக டவுன்லோட் செய்து இருக்கின்றனர். இரு செயலிகள் அதிக டவுன்லோட்களை பெற்று இருக்கும் நிலையில், வட்ஸ்அப் செயலியை டவுன்லோட் செய்வோர் எண்ணிக்கை 35 சதவீதம் சரிவடைந்து இருக்கிறது.




## 7 வரி விளக்கம் அளித்த வட்ஸ்அப்

வட்ஸ்அப் பிரைவசி பாலிசி சர்ச்சைக்கு மத்தியில் அந்நிறுவனம் ஏழு வரியில் விளக்கம் அளித்து இருக்கிறது.

வட்ஸ்அப் நிறுவனம் தனது பிரைவசி பாலிசியை மாற்றுவதாக அறிவித்தது. மேலும் இதன் மூலம் வட்ஸ்அப் விவரங்கள் பேஸ்புக்குடன் பகிர்ந்து கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. வட்ஸ்அப் புது பிரைவசி பாலிசிக்கு உலகம் முழுக்க எதிர்ப்பு கிளம்பியதோடு, பலரும் சிக்னல் மற்றும் டெலிகிராம் போன்ற செயலிகளை பயன்படுத்த போவதாக தெரிவித்தனர்.

இந்த நிலையில், வட்ஸ்அப் பிரைவசி பாலிசி குறித்து அந்நிறுவனம் ஏழு வரியில் புது விளக்கம் அளித்து உள்ளது.

**வட்ஸ்அப்**

**- வட்ஸ்அப் மற்றும் பேஸ்புக் பயனர் அனுப்பும் தனிப்பட்ட குறுந்தகவல்களை பார்க்கவோ அல்லது அழைப்புகளை கேட்கவோ செய்யாது.**

**- குறுந்தகவல் அனுப்புவோர் மற்றும் அழைப்பை மேற்கொள்வது யார் என்பதை வட்ஸ்அப் கண்காணிக்காது.**

**- வட்ஸ்அப் மற்றும் பேஸ்புக் பயனர் பகிர்ந்து கொள்ளும் லொகேஷனை பார்க்க முடியாது.**

**- வட்ஸ்அப் பயனரின் காண்டாக்ட்களை பேஸ்புக்குடன் பகிர்ந்து கொள்ளாது.**

**- வட்ஸ்அப் குரூப்கள் தொடர்ந்து தனியாகவே செயல்படும்.**

**- குறுந்தகவல் மறைந்து போக செய்யும் வசதி வழங்கப்படுகிறது.**

**- பயனர் தங்களின் டேட்டாவை டவுன்லோட் செய்ய முடியும்.**

**இவ்வாறு வட்ஸ்அப் தெரிவித்து இருக்கிறது.**






## குறைந்த விலையில் கூல்பேட் வயர்லெஸ் இயர்பட்ஸ் இந்தியாவில் அறிமுகம்

கூல்பேட் நிறுவனத்தின் புதிய கூல் பேஸ் ட்ரூலி வயர்லெஸ் இயர்பட்ஸ் இந்திய சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது.

கூல்பேட் நிறுவனம் இந்திய சந்தையின் ஆடியோ அக்சஸரி பிரிவில் களமிறங்கி இருக்கிறது. இந்நிறுவனத்தின் முதல் ட்ரூ வயர்லெஸ் இயர்பட்ஸ் மாடல் கூல் பேஸ் பட்ஸ் எனும் பெயரில் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.

இந்த இயர்பட்சில் டீப் பேஸ் டிரைவர்கள், ப்ளூடூத் 5, டிஜிட்டல் பேட்டரி டிஸ்ப்ளே, யுஎஸ்பி டைப் சி சார்ஜிங் போன்ற வசதிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. கூல் பேஸ் பட்ஸ் மாடலில் 13 எம்எம் டைனமிக் டிரைவர்கள் வழங்கப்பட்டு உள்ளன. இவை சிறப்பான பேஸ் மற்றும் தலைசிறந்த ஆடியோ அனுபவத்தை வழங்குகின்றன.

மேலும் இதில் ப்ளூடூத் 5.0 வழங்கப்பட்டு இருக்கிறது. இது சீரான மற்றும் வேகமான கனெக்டிவிட்டியை வழங்குகிறது. எடை குறைந்த டால்பின் டிசைன் 2.0 கொண்டிருக்கும் கூல் பேஸ் பட்ஸ் 49 கிராம் எடை கொண்டிருக்கிறது.

இதன் சார்ஜிங் கேஸ் டிஜிட்டல் டிஸ்ப்ளே கொண்டிருக்கிறது. இது பேட்டரி அளவை காண்பிக்கிறது. இதன் இயர்பட் ஒவ்வொன்றிலும் 40mAh பேட்டரி வழங்கப்பட்டு உள்ளன.

இவை 4.5 மணி நேரத்திற்கு பேக்கப் வழங்கும் திறன் கொண்டிருக்கின்றன. மேலும் சார்ஜிங் கேஸ் சேர்க்கும் பட்சத்தில் இந்த இயர்பட்ஸ் 20 மணி நேரம் பயன்படுத்தலாம். இந்த இயர்பட்ஸ் குவிக் சார்ஜ் வசதி கொண்டிருக்கிறது. இதனை 15 நிமிடங்கள் சார்ஜ் செய்தால் மூன்று மணி நேரத்திற்கு பயன்படுத்தலாம்.

புதிய கூல்பேட் கூல் பேஸ் பட்ஸ் பிளாக் மற்றும் புளூ நிறங்களில் கிடைக்கிறது. இந்தியாவில் இதன் விலை ரூ. 1199 என நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இது அமேசான் தளத்தில் விற்பனை செய்யப்படுகிறது.




## அசத்தல் அம்சங்களுடன் சோனியின் குட்டி டிரோன் அறிமுகம்

சோனி நிறுவனம் உலகின் சிறிய டிரோனை அறிமுகம் செய்து இருக்கிறது. இதன் விவரங்களை பார்ப்போம். சோனி நிறுவனம் 2021 சிஇஎஸ் விழாவில் ஏர்பீக் டிரோன் மாடலை அறிமுகம் செய்து இருக்கிறது. இந்த டிரோனில் ஆல்பா மிரர்லெஸ் கேமராவை பொருத்தி அதிக தரமான புகைப்படம் மற்றும் வீடியோக்களை எடுக்க முடியும். புதிய சோனி ஏர்பீக் உலகின் சிறிய டிரோன் ஆகும்.

ஆல்பா சிஸ்டம் பொருத்தப்படும் பட்சத்தில் இதை கொண்டு பொழுதுபோக்கு துறையில் பல்வேறு புதுமைகளை முயற்சிக்க முடியும். ஏர்பீக் டிரோன் மற்றும் α7S III புல் பிரேம் மிரர்லெஸ் சிங்கில் லென்ஸ் கேமரா கொண்டு எடுக்கப்பட்ட வீடியோவை சோனி வெளியிட்டு இருக்கிறது.



முதற்கட்டமாக வியாபாரங்களுக்கான புதிய தொழில்முறை புகைப்படம் மற்றும் வீடியோ தயாரிப்புக்கான தளத்தை இந்த ஆண்டு வெளியிட சோனி திட்டமிட்டு இருக்கிறது. இந்த திட்டம் பற்றிய புது தகவல்களை அவ்வப்போது வெளியிடுவதாக சோனி தெரிவித்து உள்ளது.

மேலும் தொழில்முறை டிரோன் பயன்பாட்டாளர்களிடம் இருந்து கருத்துக்களை பெற சோனி நிறுவனம் அமெரிக்கா மற்றும் ஜப்பானை சேர்ந்தவர்களிடம் கூட்டு சேர இருப்பதாக அறிவித்து இருக்கிறது.

# விளையாட்டு செய்திகள்



## பிக் பேஷ்: மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி அபார வெற்றி!

பிக் பேஷ் ரி-20 லீக் தொடரின் 40ஆவது லீக் போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 111 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது. மெல்பேர்ன் மைதானத்தில் அன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணியும் அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 179 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஆந்ரே பிளெட்சர் ஆட்டமிழக்காது 89 ஓட்டங்களையும் கார்ட்ரைட் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணியின் பந்துவீச்சில், வெலேண்ட் மற்றும் பிரிக்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 180 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி, 14.2 ஓவர்கள் நிறைவில் 68 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 111 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மெட் ரென்ஷோவ் 20 ஓட்டங்களையும் ஜொனாதன் வெல்ஸ் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணியின் பந்துவீச்சில், ஆடம் செம்பா 5 விக்கெட்டுகளையும் க்ளென் மேக்ஸ்வெல் மற்றும் சஹீர் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் பில்லி ஸ்டேன்லேக் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 49 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 8 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 89 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஆந்ரே பிளெட்சர் தெரிவுசெய்யப்பட்டார்.



## அப்பாவான விராத் கோலி – மகிழ்ச்சியில் இரசிகர்கள்

இந்திய அணியின் தலைவரான விராத் கோலியின் மனைவி அனுஷ்கா சர்மாவிற்கு பெண் குழந்தை பிறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை விராத் கோலி தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளதுடன், தான் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், தாயும் குழந்தையும் தற்போது நலமாக உள்ளதாகவும் வாழ்க்கையின் அடுத்த கட்டத்தினை ஆரம்பிப்பதற்குத் தான் ஆவலாக உள்ளதாகவும் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

விராத் கோலி அவரது மனைவி மற்றும் குழந்தையுடன் உள்ள புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது .



## இலங்கை அணிக்கெதிரான முதல் டெஸ்ட்: இரண்டாம்நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 320-4

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது. இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி, இன்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில், 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 320 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில் ஜோஸ் பட்லர் 7 ஓட்டங்களுடனும், ஜோ ரூட் 168 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இதற்கமைய இலங்கை அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், இங்கிலாந்து அணி 185 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

இன்றைய ஆட்டம், ஆரம்பிப்பதற்கு முன்னதாக மழைக்காரணமாக தாமதமாகவே ஆரம்பமானது. இடைவேளைக்கு பிறகான தேநீர் இடைவேளையின் போது மீண்டும் மழைக்குறுக்கிட்டதால், இன்றைய நாள் முடிவடைவதற்கு 35 ஓவர்கள் மீதமிருந்த நிலையில் இன்றைய ஆட்டம் நிறுத்தப்பட்டது.

காலியில் அன்று (வியாழக்கிழமை) ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸிற்காக 135 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, தினேஷ் சந்திமால் 28 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், டோமினிக் பெஸ் 5 விக்கெட்டுகளையும் ஸ்டுவர்ட் புரோட் 3 விக்கெட்டுகளையும் ஜெக் லீச் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி, இன்றைய ஆட்டநேர முடிவில், 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 320 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இதன்போது ஸெக் க்ரேவ்லி 9 ஓட்டங்களுடனும் டோமினிக் சிப்ளி 4 ஓட்டங்களுடனும் ஜொனி பேயர்ஸ்டொவ் 47 ஓட்டங்களுடனும் டேனியல் லோரன்ஸ் 73 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், லசித் எம்புல்தெனிய 3 விக்கெட்டுகளையும் தில்ருவான் பெரேரா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினார்.

இன்னமும் 6 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் மூன்றாவது நாளை இங்கிலாந்து அணி அன்று(2021.01.16) தொடரவுள்ளது.

# உலக செய்திகள்

## இந்தோனேசிய பூகம்பம்- உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35ஆக அதிகரிப்பு

இந்தோனேசியாவின் சுலெவெசியை தாக்கிய பூகம்பம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35ஆக அதிகரித்துள்ளது. மஜேன் என்ற பகுதியிலும் அதன் அருகில் உள்ள மமுஜு என்ற பகுதியிலும் மோசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என தெரிவித்துள்ள அதிகாரிகள் அந்த 35 உயிரிழந்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளனர். தேடுதல் நடவடிக்கையும் மீட்பு பணிகளும் தொடர்ந்து இடம்பெறுவதால் உயிரிழப்புகள் அதிகரிக்கலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மஜேனில் 637 பேரும் மமுஜுவில் 25 பேரும் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பூகம்பம் காரணமாக சுனாமி உருவாகாத போதிலும் தொடர்ச்சியான சிறிய அதிர்வுகள் காணப்பட்டன என இந்தோனேசியாவின் காலநிலை அவதான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இன்னொரு வலுவான பூகம்பம் ஏற்பட்டால் சுனாமி உருவாகலாம் என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது நிலைமை பாதுகாப்பானதாக உள்ளது அதற்கு கடவுளிற்கு நன்றி தெரிவிக்கவேண்டும்.ஆனால் தொடர்ந்தும் சிறிய அதிர்வுகளை உணர்கின்றோம் என பாதிக்கப்பட்ட பகுதியை சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார். பூகம்கம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களிற்கு தப்பியோடினார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பூகம்பம் காரணமாக மூன்று மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. பாலங்கள் சேதமடைந்துள்ளன. 60வீடுகளும் ஹோட்டல்களும் மாகாண ஆளுநர் அலுவலகமும் சேதமடைந்துள்ளன.





## அமெரிக்கப் பொருளாதாரத்தை மீட்க 1.9 இலட்சம் கோடி டொலர்கள் செலவிடுவதற்கான திட்டம்

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கத்திலிருந்து அமெரிக்கப் பொருளாதாரத்தை மீட்க 1.9 இலட்சம் கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடுவதற்கான திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள ஜோ பைடன் வெளியிட்டுள்ளார். இந்த திட்டத்துக்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் கொடுக்குமானால், இந்த நிதியில் 1 இலட்சம் கோடி டொலர்கள் நேரடியாக அமெரிக்கக் குடும்பங்களுக்கு உதவி நிதியாக அளிக்கப்படும்.



இதன் மூலம் ஒவ்வொரு அமெரிக்கரும் தலா 1,400 டொலர்கள் நிதி உதவி பெறுவார்கள். அவர் அறிவித்துள்ள ஒவ்வொரு அமெரிக்கருக்குமான, 1,400 டொலர் நிதியுதவி கடந்த மாதம் ட்ரம்ப் அறிவித்த 600 டொலர் உதவித்திட்டத்தை உள்ளடக்கியது அல்ல. இரண்டுமே கிடைக்கும் என்பது தான் பைடன் திட்டம். இந்த நிதியில், குடும்ப உதவி தவிர, 41,500 கோடி டொலர் கொவிட்-19 தடுப்பூசித் திட்டத்தை செயற்படுத்தவும், 44,000 கோடி டொலர் சிறுவணிகங்களுக்கு உதவி செய்யவும் பயன்படுத்தப்படும்.

உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல் நாடாக விளங்கும் அமெரிக்காவில், தொற்றுத் தாக்கத்தில் 1 கோடியே 10 இலட்சம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.

## வடகிழக்கு சிரியாவில் இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல்

வடகிழக்கு சிரியாவில் ஈரானிய ஆதரவுடைய போராளிகளின் நிலைகளை இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்கியதில் 57பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈரானிய ஆதரவுடைய போராளிகள் மற்றும் இஸ்லாமிய புரட்சிகர காவல்படைப் போராளிகள் அதிக அளவில் இருப்பதைக் கொண்ட டெய்ர் எஸோர் மாகாணத்தில் அன்று (புதன்கிழமை) இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.



இவர்களில் 14 ஆட்சி துருப்புக்கள், 16 ஈராக் போராளிகள் மற்றும் ஈரான் சார்பு பாத்திமிட் படைப்பிரிவின் 11 ஆப்கானிய உறுப்பினர்கள் அடங்குவர்.

'இது சிரியாவில் இஸ்ரேலிய தாக்குதல்களில் ஏற்பட்ட மிகப்பெரிய இறப்பு எண்ணிக்கை' என்று சிரிய மனித உரிமைகளுக்கான ஆய்வகத்தின் ராமி அப்துல் ரஹ்மான் கூறினார்.

மேலும், வொஷிங்டனில் உள்ள ஒரு மூத்த புலனாய்வு அதிகாரி, அமெரிக்கா வழங்கிய உளவுத்துறையுடன் இந்த வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும், ஈரானிய ஆயுதங்களை சேமிக்கப் பயன்படும் சிரியாவில் கிடங்குகளைத் தாக்கியதாகவும் கூறினார்.

## சீனாவின் ஹைலோங்ஜியாங் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனம்!

கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றுப் பரவல் தீவிரமடைந்ததையடுத்து சீனாவின் ஹைலோங்ஜியாங் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மிகவும் அத்தியாவசிய தேவை இருந்தால் மட்டுமே குடிமக்கள் வெளியே செல்ல வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த திடீர் அவசர நிலையால் 3.7 கோடி மக்கள் புதன்கிழமை முதல் தங்கள் குடியிருப்பிலேயே முடங்கி உள்ளனர்.

இதேபோல, நாட்டின் வடக்கு பிராந்தியங்களில் 2 கோடிக்கும் அதிகமான மக்கள் இப்போதும் ஒருவித ஊரடங்கு விதிகளின் கீழ் உள்ளனர். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் பெரும்பாலானோருக்கு அறிகுறியில்லாத தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனால், கொரோனா பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ள நிலையில் அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



## கொரோனா ஆபத்துள்ள 12 நாடுகளுக்கான பயணத்தடையை அறிமுகப்படுதியது சவுதி அரேபியா!

கொரோனா வைரஸ் கட்டுக்குள் இல்லாத நாடுகளுக்கும் மற்றும் புதிய உருமாறிய தொற்றுகள் பதிவான நாடுகளுக்கும் பயணிப்பதைத் தவிர்க்கும் வகையில், சவுதி அரேபியா 12 நாடுகளுக்கான பயணத்தடையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி லிபியா, ஏமன், லெபனான், துருக்கி, ஆர்மீனியா, ஆப்கானிஸ்தான், சிரியா, ஈரான், சோமாலியா, பெலாரஸ், கொங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் வெனிசுவேலா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிக ஆபத்துள்ள நாடுகளில் உள்ள குடிமக்கள் உடனடியாக சவுதி அரேபிய தூதரகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று உட்துறை அமைச்சகம் அறிவுறுத்தியது. அனுமதிக்கப்பட்ட நாடுகளுக்கு பயணிக்க விரும்பும் சவுதி அரேபியர்கள் கொரோனா வைரஸ் நோய்க்கு எதிரான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பின்பற்றுவதை உறுதிசெய்து, பாதுகாப்பற்றதாகக் கருதப்படும் பகுதிகளிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்று அமைச்சகம் மேலும் கூறியுள்ளது.

பலநாடுகளில்நிலவும்பாதுகாப்புநிலைமைகள், உறுதியற்றதன்மை, கொரோனா வைரஸ் தொற்று மற்றும் புதிய உருமாறிய வைரஸ் பரவல் ஆகியவற்றின் மத்தியில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து முன் அனுமதி பெறாமல் குறிப்பிட்ட நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதற்கு எதிராக எச்சரிக்கை விடுப்பதாக உட்துறை அமைச்சகம் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.



# ஆயிரம் ஆண்டுகளை கடந்த தஞ்சை பெரியகோவில்





இராஜராஜ சோழன் உலகிற்கு விட்டுச்சென்ற மிகப்பெரிய சொத்து 'தஞ்சை பெரிய கோவில்'. தஞ்சை பழைய பஸ் நிலையத்தில் இருந்து சிறிது தொலைவில். வலது புறம் கல்லணைக் கால்வாய். இடதுபுறம் சிவகங்கை பூங்கா. முன்புறம் ராஜா மிராசுதார் மருத்துவமனை இவைதான் பெரிய கோவிலின் தற்போதைய எல்லைகள். "பிரகதீஸ்வரர் கோவில்" என வடமொழியிலும். "பெருவுடையார் ஆலயம்" என தமிழிலும் அழைக்கப்படும்.

இக்கோவில் கட்டப்படும் முன்பு இந்த இடத்தில் நைமி சாரண்ய முனிவர்கள் வாழ்ந்து வந்ததாக புராண வரலாறு கூறுகிறது. சுற்றுப்புறத்தில் மலைகளே இல்லாத நிலையில் முழுக்க முழுக்க கருங்கல்லால் இக்கோவில் கட்டப்பட்டுள்ளது இந்த கோவிலின் சிறப்புகளில் ஒன்று. ராஜராஜன் இந்த கோவிலை கி.பி.1004-ல் தொடங்கி 6 ஆண்டுகளில் கட்டி முடித்துள்ளான். 1010-ம் ஆண்டு முதல்முறையாக இந்தகோவிலில் கும்பாபிஷேகம் நடந்தது.

மகாமேரு மலை

உலகில் உள்ள சிவாலயங்களுக்கு மகுடமாக தஞ்சை பெரிய கோவில் திகழ்கிறது. இந்த கோவில் வானில் உள்ள கயிலாய மலையின் அமைப்பை ஒத்து கட்டப்பட்டுள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றனர். 216 அடி உயரமுள்ள விமானம் மகாமேரு மலையாக வடிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் திசை சிகரத்தில் சிவபெருமான். உமாதேவி. குமாரர்கள். பிறதெய்வங்களின் சிற்பங்கள் உள்ளன. தஞ்சை பெரிய கோவிலை உருவாக்கிய தலைமை தச்சன் 'குஞ்சரமல்லன்'. ராஜராஜன். இந்த சிற்பிக்கு "ராஜராஜப் பெருந்தச்சன்" என்ற விருது வழங்கி சிறப்பித்துள்ளான். பெரிய கோவிலின் வரலாற்றில் தொடர்புடைய வேறு பலரும் உள்ளனர். ராஜராஜன் பெரிய கோவிலைக் கட்டி முடித்துவிட்டு அதன் திருச்சுற்று மாளிகையின் பெரும்பாகத்தை எழுப்பும் பொறுப்பை தனது தளபதியான கிருஷ்ணன் ராமன் என்பவரிடம் ஒப்படைத்தான்.

கேரளாந்தகன் கோபுரம்

தஞ்சை பெரிய கோவிலில் உள்ள கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் வாயில் கோபுரமாகும். இதன் வாயிலில் நிறுத்தப்பட்டுள்ள 2 நிலைக் கால்கள் காண்பவர்களை வியப்பில் ஆழ்த்துகின்றன. 4 அடி நீளம். 3 அடி அகலம். 40 அடி உயரத்தில் ஒரே கல்லிலான இந்த 2 நிலைக்கால்களும் தஞ்சையில் இருந்து குறைந்த பட்சம் 80 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து கொண்டுவந்து நிறுத்தப்பட்டுள்ளன. ராஜராஜன். கேரள மன்னன் பாஸ்கர ரவிவர்மனுடன் போர் தொடுத்து வெற்றி பெற்றதன் நினைவாக இந்த வாயிலுக்கு 'கேரளாந்தகன் வாயில்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இக்கோவிலின் இரண்டாவது கோபுரம் 'ராஜராஜன் கோபுர வாயில்' என்று அழைக்கப்படுகிறது. இந்த கோபுரத்திலும் 40 அடி உயரமுள்ள 2 நிலை கால்கள் உள்ளன.

மகாநந்தி

ராஜராஜன் வாயிலுக்கு எதிரே உள்ள 16 கால்மண்டபத்தில் ஒரே கல்லில் வடிக்கப்பட்ட மிகப்பெரிய நந்தி உள்ளது. இந்த நந்தி கி.பி. 16-ம் நூற்றாண்டில் விஜயநகர பேரரசின் காலத்தில் நாயக்க மன்னர்களால் உருவாக்கபட்டதாகும். இந்த மண்டபத்துக்கு தென்புறம் திருச்சுற்று மாளிகையில் வடதிசை நோக்கியவாறு காணப்படும் நந்தியே ராஜராஜன் காலத்தில் கோவிலுக்காக வடிக்கபட்டது. கோவில் கருவறையில் பிரகதீஸ்வரர் என்ற பெரிய லிங்கம் இடம்பெற்றுள்ளது. கருவறையைச் சுற்றி 6 அடி அகலத்தில் சாந்தாரம் என்ற சுற்று அறை உள்ளது. இந்த அறைக்கு தெற்கு. மேற்கு. வடக்கு ஆகிய மூன்று திசைகளிலும் மிகப்பெரிய வாயில்கள் உள்ளன. இங்கு படிக்கட்டுகள் கிடையாது. காற்று இவ்வறைக்குள் புகுவதற்கு இவை அமைக்கப்பட்டுள்ளன. கடுங்கோடையிலும் இச்சுற்று அறையில் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டே இருக்கும். இந்த அறையின் கட்டுமான அமைப்பு ஐம்பூதங்களுள் ஒன்றான காற்று இறைவனை ஆராதிக்கும் வகையில் அமைந்துள்ளது. கருவறையினுள் 13 அடி உயரத்தில் சிவலிங்கம் உள்ளது. சிவலிங்கத்தின் கீழ் 55 அடி சுற்றளவு உடைய வட்ட பீடமும். 6 அடி நீள கோமுகமான நீர்த்தூம்பும் அமைந்துள்ளன.

சிற்பங்கள்

கருவறையில் உள்ள லிங்க வடிவத்துக்கு மேலாக விமானத்தின் உச்சியில் திகழும் கலசத்தின் பீடம் வரை இக்கட்டிடம் உட்புறம் முழுக்கூடாக அமைந்துள்ளது. பிரபஞ்சம் பெருவெளியாகவும். ஆடவல்லான் என்னும் வடிவமாகவும் அந்த இடத்தை கருதியதால் சிவபெருமான் ஆடிக்காட்டும் 108 கரண சிற்பங்கள் செதுக்கப்பட வேலை தொடங்கப்பட்டது. இவற்றுள் 80 கரண சிற்பங்கள் மட்டுமே முழுமை அடைந்துள்ளன. ( இந்த சிற்பங்களை செதுக்கும் போது ஏற்பட்ட சில சம்பவங்களால் இப்பணி தடைப்பட்டதாக சில செய்திகள் கூறுகின்றன)

பொற்கோவில்

தஞ்சை பெரிய கோவிலை ராஜராஜன் கட்டியபோது விமானத்தின் மேல் செப்புத் தகடுகளைப் போர்த்தி. அவற்றின்மேல் பொன் பதித்ததாக அண்மையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் கூறுகின்றன. சிவபெருமான் தங்கியுள்ள மேருமலை எவ்வாறு பொன்மலையாக விளங்குகிறதோ அதைப்போல தஞ்சை பெரியகோவிலும் பொன்மலையாக விளங்குகிறது' என்று ஒட்டக்கூத்தர் தன் நூலில் எழுதி உள்ளார். விமானத்தின் மேல் பதிக்கப்பட்ட பொன் பிற்காலத்தில் படையெடுப்புகளில் சூறையாடப்பட்டுள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்திய மண்ணில் திகழ்ந்த ஒரே பொற்கோவில் தஞ்சை பெரிய கோவில்தான் என்பது வரலாற்று உண்மை.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 17.01.2021 அன்று வெளியிடப்பட்டது.